விலை: 50.00
பக்கங்கள் - 16
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 279 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 07 திங்கட்கிழமை (23.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

வெளிநாடுகளுக்கான
DHL பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணத்தில் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
TCN EXPRESS
208, GALLE ROAD, COLOMBO-6.
321, K.K.S.ROAD, JAFFNA.
MAIN STREET, MANNAR.
T.P: 0777 554528



## நிறைவேற்று அதிகாரம் கொண்ட

# ஜனாதிபதியாக அநுர தெரிவு

(கொழும்பு)

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க நேற்றிரவு இதனை அறிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

## அநுர கடந்து வந்த பாதை...

(கொழும்பு)

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அநுர குமார திஸாநாயக்க 1968ஆம் ஆண்டு 11 மாதம் 24ஆம் திகதி கலேவெலவில் பிறந்தார்.

நான்கு வருடங்களுக்குப் பின் கெக்கிராவையில் குடியேறிய அநுர குமார திஸாநாயக்க ஆரம்பக் கல்வியை தம்புத்தேகம காமினி வித்தியாலயத்தில் பயின்றார். 15

## வெற்றி அனைவருக்கும் சொந்தமானது - அநுர

(கொழும்பு)

இந்த வெற்றி நம் அனைவருக்கும் சொந்தமானது என ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற அநுர குமார திஸாநாயக்க தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும் பல நூற்றாண்டுகளாக நாம் வளர்த்து வந்த கனவு இறுதியாக நனவாகும். இந்தச் சாதனை எந்த ஒரு நபரின் உழைப்பின் விளைவு அல்ல, ஆனால் நூறாயிரக்கணக்கான உங்களின் கூட்டு முயற்சி.

உங்கள் அர்ப்பணிப்பு எங்களை 15

## மக்களுக்கு நன்றி
### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

தேர்தலின்போது அமைதியான முறையில் செயற்பட்டதற்காக மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாகத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

ஏனைய தேர்தல்களுடன் ஒப்பிடும் போது இந்த ஜனாதிபதித் தேர்தலில் பாரதூரமான வன்முறைச் சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என அவர் தெரிவித் 15

## ரணில் தோல்வி

(கொழும்பு)

நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்துள்ளார்.

தனது அரசியல் வாழ்வின் மிக முக் 15

## ஜனாதிபதியாக அநுர இன்று பதவியேற்பார்
### ஹரிணி பிரதமராக நியமிக்கப்படவுள்ளார்

(கொழும்பு)

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க இன்று பதவியேற்கவுள்ளார்.



கொழும்பில் ஜனாதிபதி 15

## தமிழர் பகுதியில்
# அரியநேத்திரனுக்கு அதிகளவான வாக்குகள்

(யாழ்ப்பாணம்)

தமிழர் பகுதியில் பா.அரியநேத்திரனுக்கு அதிகளவான வாக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் வடக்கின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 15

## பாராளுமன்றம் கலைக்கப்படலாம்!

(கொழும்பு)

9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க இன்று பதவியேற்கவுள்ள நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அநுர ஜனாதிபதியாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட அதே நிமிடத்தில் தற்போதைய அரசாங்கம் செயலிழக்கும்.

அதாவது அமைச்சரவை தாமாகக் கலைந்து விடும். அதேவேளை அநுரவின் எம்.பி பதவி வெற்றிடத்திற்கு ஒருவர் எம்.பியாக நியமிக்கப்படுவார்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி அநுர மற்றும் புதிய எம்.பி உட்பட ஐவர் கொண்ட அமைச்சரவை நியமிக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து பாராளுமன்றம் கலைக்கப்படும். பாராளுமன்றத் தேர்தல் நடந்து முடியும் வரை அந்த ஐவர் கொண்ட அமைச்சரவை காபந்து அரசாங்கமாக இயங்கும். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்கு

**நான் கொடுப்பதற்கு பழகிக் கொண்டேன். காரணம் என்னிடம் அதிகமாக இருப்பதனால் அல்ல. இல்லாதவனின் வலியை புரிந்து கொண்டதனால்**

01. யாழ். அல்லைப்பிட்டி 2ம் வட்டாரத்தில் சகல வசதிகளுடனான வீடும், 2 கிணறும் அமைந்த 10 ஏக்கர் காணியும் யாழ். K.K.S வீதியில் சிவன் கோயிலுக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் ஜெகன் களஞ்சியத்திற்கு அருகில் 6 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
02. யாழ். தட்டாதெருச்சந்திக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 10 பரப்புக் காணியில் 5 மாடிக்கட்டடம் அமைந்த காணி விற்பனைக்குண்டு.
03. யாழ். கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் நாவலர் வீதி முகப்புடன் 2 பரப்பு 2 குழிக்காணியும் 2 பரப்பு 14 குழிக் காணியும் விற்பனைக்குண்டு.
04. யாழ்.பலாலி வீதியில் திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் 6 பரப்பும், 4 பரப்பும் கொண்ட காணிகள் விற்பனைக்குண்டு.
05. யாழ். பிறவுண் வீதியில் நீராவியடிப்பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் பிறவுண் வீதி முகப்புடன் 6 பரப்பும், 4 பரப்பும் காணிகள் விற்பனைக்குண்டு.
06. யாழ். வைத்தியசாலை வீதியில் மரக்கறிச் சந்தைக்கு முன்பாக 60 அடி அகலமும் 600 அடி நீளமும் கொண்ட 3 கடைகள் விற்பனைக்குண்டு.
07. யாழ். வைத்தியசாலை வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 20 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட காணி விற்பனைக்குண்டு.
08. யாழ். பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 5 பரப்பில் அமைந்த மாடி வீடு விற்பனைக்குண்டு.
09. யாழ். கஸ்தூரியார் வீதியில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக்கடை விற்பனைக்குண்டு.
10. யாழ். மின்சார நிலைய வீதியில் பேருந்துத் தரிப்பிடத்திற்கு பின்புறமாக 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக்கடை விற்பனைக்குண்டு.
11. யாழ். A9 வீதியில் நாவற்குழிக்கு அண்மையில் 129 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
12. யாழ்.அச்சுவேலியில் 100 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
13. யாழ்.அரியாலை பூம்புகாரில் 100 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.
14. யாழ்.பிறவுண் வீதியில் 2 பரப்பு காணியும் நல்லூர் குறோஸ் றோட்டில் 10 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு

**கனகசபை தர்மகுலசிங்கம்**

**077 723 2535**

**இல. 185, மின்சாரநிலைய வீதி,யாழ்ப்பாணம்.**

**இல.183, காலி வீதி , வெள்ளவத்தை.**

(C-1241)


தொண்டைமானாறில்

# விபரீத முடிவெடுத்த மாணவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறில் விபரீத முடிவெடுத்த பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

வடமராட்சி தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்த சிவகுமார் தனுசன் (வயது 17) என்ற மாணவன் தூக்கிட்டு உயிரிழந்துள்ளான்.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை உடற்கூற்று சோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# ஆசிரியரின் சடலம்

## உறவினர்களிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கற்கோவளம் கடலில் மாயமான நிலையில் இரு தினங்களுக்கு பின் சடலமாக மீட்கப்பட்ட வேம்படி மகளிர் கல்லூரியின் ஆசிரியரது சடலம்மீதான உடற் கூற்று பரிசோதனைகள் நேற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திர தீர்த்தம் பருத்தித்துறை கற்கோவளம் கடலில் இடம்பெற்ற வேளை நீராடிக்கொண்டிருந்த குறித்த ஆசிரியர் மாயமாகிய நிலையில் நேற்று முன்தினம் மாலை கடற்றொழிலுக்குச் சென்ற கற்கோளம் மீனவர்களினால் குறித்த ஆசிரியர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

சடலத்தினைப் பார்வையிட்ட பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் பா.சுப்பிரமணியம் சடலத்தினை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டவைத்திய அதிகாரிக்கு கட்டளையிட்டிருந்தார்.

அதன் பிரகாரம் நேற்று உறவினர்களினால் சடலம் உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து உடற்கூற்று பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டது. சட்டரீதியான நடவடிக்கைகளின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-7)


**நாகபூஷணி திருமண சேவை**


வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார்துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும். (1996)

**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

**077 138 7596, 071 999 9306**


# மரண அறிவித்தல்



மலர்வு 20.05.1936

உதிர்வு 21.09.2024

## திரு. வைத்திலிங்கம் நடராசா

(ஓய்வுபெற்ற மூத்த அரச கணக்காளர் – அரச கணக்காய்வுத் திணைக்களம் Superintendent - Audit Department )

யாழ். அனலைதீவைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணையை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு. வைத்திலிங்கம் நடராசா அவர்கள் 21.09.2024 சனிக்கிழமை காலை அவரது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராஜதுரை - நாகமுத்து தம்பதியினரின்அன்பு மருமகனும் அமரர் வசந்தகோகிலம் (லீலா) அவர்களின் அன்புக் கணவரும் இளங்கோ(பிரான்ஸ்), மணிவண்ணன் (பிரித்தானியா), தமயந்தி(கனடா), ஜானகி(பிரித்தானியா), வாசுகி(பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ருனித்தா, விஜிதா, சிங்காரவேலன், பஞ்சகுமார், இராகுலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சோதியா, பாநிலா, இளமாறன், ஆதிகேசவன், குந்தவை, நிதுஷா, சௌமிகா, நிர்த்திகா, பிரணவக்குமரன், சாரண்யா, சத்தியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் இராதபுஷ்பம், விஜயலட்சுமி, காலஞ்சென்ற புஷ்பராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.09.2024 செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :

இளங்கோ, மணிவண்ணன் (பிள்ளைகள்)

செல்வகுமார் - இந்திராணி

தொடர்புகளுக்கு :

00 94 21 222 5635

00 94 76 994 5829

10, [illegible], வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (2106)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறியவர்களுக்கு

# 4 லட்சம் ரூபாய் வரை அபராதம்

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பின் போது தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் 4 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது**

இது குறித்து பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி கருத்துத் தெரிவிக்கையில் "தேர்தல் வாக்குப் பதிவு சுமூகமான முறையில் இடம்பெற்றது.

பெரிதளவில் வன்முறை சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை. பொலன்னறுவை மற்றும் மெதிரிகிரிய ஆகிய பகுதிகளில் தாக்குதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. வாக்காளர்களை அச்சுறுத்திய சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

சட்டவிரோத பிரசார நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளன. நூற்றுக்கு 18 சதவீதமான அளவில் சட்டவிரோத பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்றம் ஊடாக இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கு பொலிஸார் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.


தேர்தல் சட்டவிதிமுறைகளை மீறியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் குறிப்பாக 4 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும்" இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி)

## 'நாங்கள் விதைகள் என்று அவர்களுக்கு தெரியாது'

### முகநூலில் பதிவிட்ட அநுர

(கொழும்பு)

"அவர்கள் எங்களை புதைக்க முயற்சித்தார்கள் நாங்கள் விதைகள் என்று அவர்களுக்கு தெரியாது" என தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அநுரகுமார திஸாநாயக்க தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.



இந்த முகநூல் பதிவினை அநுரகுமாரவின் ஆதரவாளர்கள் தற்போது அதிகம் பகிர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஜனாதிபதிக்கான இல்லத்தில் இருந்து மனைவியுடன் வெளியேறினார் ரணில்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கான உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து தனது பாரியார் சகிதம் வெளியேறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவரும், அவரது பாரியார் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவும் அவர்களின் தனிப்பட்ட வாசஸ்தலமான கொள்ளுப்பிட்டி ஐந்தாம் ஒழுங்கையில் உள்ள வீட்டுக்கு தற்போது குடிபெயர்ந்துள்ளதாக கூறப்படுகிறது.



அத்துடன் வெற்றி பெறும் வேட்பாளரிடம் அதிகாரத்தை சுமூகமாக கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி செயலாளருக்கு ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார் எனவும் கூறப்படுகிறது.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்தும் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட கோவைகள் தற்போது அகற்றப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# சொந்த தொகுதியிலே தூக்கி எறியப்பட்ட ராஜபக்ஷக்கள்



(கொழும்பு)

நாமல் ராஜபக்ஷவின் சொந்தத் தேர்தல் தொகுதியான பெலியத்தை தேர்தல் தொகுதியில் அவர் படுதோல்வியடைந்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷவின் தேர்தல் தொகுதியும், ராஜபக்ஷ குடும்பத்தின் பரம்பரை தொகுதியுமான பெலியத்தையில் அநுரகுமார திஸாநாயக்க பாரிய வெற்றியீட்டியுள்ளார்.

அவர் 34,320 வாக்குகளைப் பெற்று 53.43 வீத வெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ள சஜித் பிரேமதாச 16,820 வாக்குகளையும், ரணில் விக்கிரமசிங்க 5,460 வாக்குகளுடன் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளனர்.

வெறுமனே 5,385 வாக்குகளுடன் நாமல் தனது சொந்தத் தேர்தல் தொகுதியில் நான்காவது இடத்தைப் பிடித்து படுதோல்வியடைந்துள்ளார். (நி)

## நாட்டை விட்டு வெளியேறினார் நாமலின் மனைவி லிமினி

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் மனைவி லிமினி அதிகாலை நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

**லிமினி வினோஜா வீரசிங்க** மற்றும் அவரது தகப்பனாரான சட்டத்தரணி திலகசிறி வீரசிங்க ஆகியோர் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருந்த நேரம் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் எமிரேட்ஸ் விமானம் மூலம் டுபாய்க்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

நேற்று முன் தினம் நாமல் - லிமினி தம்பதியின் இரண்டு குழந்தைகள், லிமினியின் தாயார் மற்றும் பணிப்பெண் ஆகியோரும் நாட்டை விட்டும் வெளியேறிருந்தனர்.

இதற்கிடையே முன்னாள் அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமேவும் தனது குடும்பத்தினர் சகிதம் இந்தியாவின் சென்னை நோக்கி புறப்பட்டு சென்றுள்ளார். (நி)

## எல்ல வனப்பகுதியில் திடீர் தீப் பரவல்



(ஹற்றன்)

எல்ல ரயில் நிலைய வனப் பகுதியில் நேற்று பிற்பகல் திடீரென தீப் பரவியதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதுளை மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஈ.எம்.எல்.உதயகுமார தெரிவித்தார்.

காட்டுப் பகுதிக்கு யாரேனும் தீ வைத்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**எல்ல ரயில் நிலையத்துக்** கருகில் உள்ள வனப்பகுதியில் ஏற்பட்ட தீ, உதர ரயில் பாதையின் எல்ல நிலையத்துக்கு அருகாமையில் இருந்த ரயில் பாதையான தெமோதர வானளாவிய வளைவு பாலம் நோக்கி பரவியதாகவும் ரயில் ஊழியர்கள் மற்றும் அருகிலுள்ள கிராம மக்கள் ஒன்றிணைந்து தீயை அணைத்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (நி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

# அஸ்வின், ஜடேஜா சுழலில் சிக்கிய பங்களாதேஷ் அணி

### இந்தியா அபார வெற்றி





சென்னை டெஸ்டில் இந்திய அணி 280 ரன் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்றது. சுழலில் அசத்திய அஸ்வின் 6 விக்கெட் சாய்த்தார்.

இந்தியா வந்துள்ள பங்களாதேஷ் அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட், சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடந்தது. முதல் இன்னிங்சில் இந்தியா 376, பங்களாதேஷ் 149 ரன் எடுத்தன. இந்திய அணி இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட் டுக்கு 287 ரன் எடுத்து "டிக்ளேர்" செய்தது.

இரண்டாவது இன்னிங் சில் 515 ரன் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, மூன்றாவது நாள் முடிவில் 4 விக்கெட்டுக்கு 158 ரன் எடுத்திருந்தது.

ஷாண்டோ (51), சாகிப் (5) அவுட்டாகாமல் இருந்தனர். அஸ்வின் நேற்று நான்காவது நாள் ஆட்டம் நடந்தது. ஷாண்டோ, சாகிப் இருவரும் முதல் ஒரு மணி நேரம் தாக்குப் பிடித்தனர். பின் அஷ்வினை அழைத்தார் ரோகித் சர்மா.

இதற்கு உடனே பலன் கிடைத்தது. முதலில் சாகிப்பை (25) வெளியேற்றினார் அஷ்வின். மறுபக்கம் லிட்டன் தாசை (1) அவுட்டாக்கினார் ஜடேஜா. மீண்டும் மிரட்டிய அஷ்வின், மெஹிதி ஹசன் மிராஸ் (8), டஸ்கின் அகமதுவை (5) அவுட்டாக்கினார்.

கப்டன் ஷாண்டோ 82 ரன் எடுத்து ஜடேஜா பந்தில் அவுட்டானார். கடைசியில் ஹசன் முகமது (7) திரும்ப, பங்களாதேஷ் அணி இரண் டாவது இன்னிங்சில் 234 ரன்னுக்கு ஓல் அவுட்டானது.

இந்திய அணி 280 ரன் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்றது. தொடரில் 1-0 என முன்னிலை பெற் றது. அஷ்வின் 6, ஜடேஜா 3 விக்கெட் சாய்த்தனர். இரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட், வரும் செப். 27 இல் கான்பூரில் இடம் பெறவுள்ளது. (6)

## இங்கிலாந்து அணி ஏமாற்றம் அவுஸ்திரேலியா ஆதிக்கம்




இங்கிலாந்துக்கு எதிரான 2 ஆவது ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 68 ரன் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது.

இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது. லீட்சில் 2 ஆவது போட்டி நடந்தது. "டாஸ்" வென்ற இங்கிலாந்து கப்டன் ஹாரி புரூக் "பீல்டிங்" தேர்வு செய்தார்.

அவுஸ்திரேலிய அணிக்கு மாத்யூ ஷார்ட் (29), டிராவிஸ் ஹெட் (29) நல்ல துவக்கம் கொடுத்தனர். ஸ்டீவ் ஸ்மித் (4) ஏமாற்றினார். கப்டன் மிட்சல் மார்ஷ் (60), அலெக்ஸ் கேரி (74) அரைசதம் கடந்தனர். அவுஸ்திரேலிய அணி 44.4 ஓவரில் 270 ரன் எடுத்தது.

பின் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு பென் டக்கெட் (32), ஜேமி ஸ்மித் (49) ஆறுதல் தந்தனர். மற்றவர்கள் ஏமாற்ற இங்கிலாந்து அணி 40.2 ஓவரில் 202 ரன்னுக்கு ஓல்-அவுட்டாகி தோல்வியடைந்தது. அவுஸ்திரேலியா சார்பில் ஸ்டார்க் 3 விக்கெட் வீழ்த்தினார். அவுஸ்திரேலிய அணி 2-0 என முன்னிலை பெற்றது. (6)

## சமரவீரவுக்கு 20 ஆண்டுகள் தடைவிதித்த ஆஸி கிரிக்கெட்

நடத்தை விதிகளை மீறிய காரணத்திற்காக இலங்கை கிரிக்கெட் அணி யின் முன்னாள் வீரர் துலிப் சமரவீரவுக்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகம் 20 ஆண்டுகள் தடை விதித்துள்ளது.

52 வயதான சமரவீர, கிரிக்கெட் விக்டோரியா ஊழியராக இருந்த காலத்தில் அவுஸ்திரேலிய கிரிக்கெட்டின் நடத்தை விதிகளை கடுமையாக மீறியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்த விசாரணைகளை முன்னெடுத்த அவுஸ்திரே லிய கிரிக்கெட் நிர்வாகம் அவருக்கு 20 ஆண்டுகள் தடை உத்தரவை வழங்கியது.

1993 மற்றும் 1995 இற்கு இடையில் இலங்கைக்காக ஏழு டெஸ்ட் மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் விக்டோரியா பெண்கள் மூத்த பயிற்சியாளர் பதவிக்கு தரம் உயர்த்தப்படுவதற்கு முன்பு, நீண்ட காலமாக விக்டோரியா பெண்கள் மற்றும் மெல்போர்ன் ஸ்டார்ஸ் WBBL உதவி பயிற்சியாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)**

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

2. விலைக்கேள்வியானது தேசியபோட்டி கேள்வியின் (NCB) மூலம் நடாத்தப்படும்.

3. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கண்டி வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 021 228 5932/ 021 222 5719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.

5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி,கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **23.09.2024 ஆம் திகதி முதல் 07.10.2024 ஆம்** திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

6. **30.09.2024** ஆம் திகதி **மு.ப 10.30** மணிக்கு முன் பெறுகைக் கூட்டம் **(pre-bid meeting)** எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.

7. கேள்விகள் **07.10.2024** ஆம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர் பிராந்திய கேள்விச்சபை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பொருட்களுக்கான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். **07.10.2024** ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

8. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் **[Bid Security]** செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

9. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| Bid No | Description of work | Estimated Cost (Rs.) In Million without VAT | Contract Period | Required Grade | Non Refundable Fees | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/K/RDHS/PSDG/RMSD/S/III/2024 | Expenses necessary to be incurred for completion of the construction of RMSD – Stage III at Kilinochchi | 11Mn | 90 days | C6 or C5 [Building] | 3,000.00 | 110,000.00 | Till 19.01.2025 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.**
T.P 0212285719,Fax 0212285931
Email: rdhskoc@gmail.com, finance:rdhskoc@gmail.com

(சி-1236)

# ஆளுநர் பதவியை இராஜினாமா செய்தார் லக்ஷ்மன் யாப்பா




(கொழும்பு)

தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன நேற்று தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

வடமேல் மாகாண ஆளுநராக பதவி வகித்த லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கடந்த மே மாதம் ஜனாதிபதியினால் தென் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# குவாட் தலைவர்களுடன் பிரதமர் மோடி சந்திப்பு



(வோஷிங்டன்)

இந்தியா. அமெரிக்கா, ஜப்பான். அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கும் குவாட் அமைப்பின் மாநாடு அமெரிக்காவின் டெல்வாரே நகரில் உள்ள வில்மிங்டனில் நடக்கிறது.

குவாட் மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி அமெரிக்கா சென்றடைந்தார். பிலடெல்பியா விமான நிலையத்தில் இறங்கிய பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மேலும், அங்கு கூடியிருந்த இந்திய வம்சாவளியினருடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார்.

மேலும், அமெரிக்கா சென்ற பிரதமர் மோடி, அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடனைச் சந்தித்தார். அப்போது ஜனாதிபதி ஜோ பைடன், இந்தியா உடனான அமெரிக்காவின் உறவு வலுவானதாக உள்ளது என தெரிவித்தார்.

இந்நிலையில், குவாட் மாநாட்டில் பங்கேற்க வந்த ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா, அவுஸ்திரேலியா பிரதமர் ஆண்டனி அல்போன்ஸ் ஆகியோரை ஜனாதிபதி ஜோ பைடன் உற்சாகமாக வரவேற்றார்.

அதன்பின், குவாட் அமைப்பின் தலைவர்கள் 4 பேரும் சந்தித்து ஒன்றாக குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.(நி)

# இராசிபலன்

23.09.2024
புரட்டாதி 07, திங்கட்கிழமை
சஷ்டி முன்னிரவு 8.08 மணிவரை
ரோகினி பின்னிரவு 4.44 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணி வரை
இராகுகாலம்7.32-9.02 மணிவரை
சந்திராஷ்டமம்- சித்திரை

வளவன்

**மேஷம்**
சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**ரிஷபம்**
வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், திட்டமிட்ட காரியத்தில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பல நாட்களாக சந்திக்காத நபர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**
சுப காரிய செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**கடகம்**
பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்ப உறவுகளிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்**
செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி**
தொழிலில் இருந்த எதிர்ப்புகள் விலகும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இ[illegible]

**துலாம்**
அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, துயரங்கள் தீர பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**விருச்சிகம்**
தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள் தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**தனுசு**
இனத்தின் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடன் பிரச்சினைகளை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலன் [illegible] அனுகூலமுண்டு.

**மகரம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்**
பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், போசன சுகமுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மீனம்**
பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**நண்பர்களை தேர்ந்தெடுப்பது போல் நூல்களையும் தேர்ந்து எடுத்துபடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்க வடக்கில் நிதி மூலத்துக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)


வடக்கு மாகாணத்தில் சன் பவர் குழுமத்தினால் நிர் மாணிப்பதற்கு திட்டமிடப்பட் டுள்ள 32 ஆயிரம் வீடுகளுக் கான நிதி மூலத்திற்குரிய அனுமதி கிடைத்துள்ளது.

வட மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவினால் கடந்த வியாழக்கிழமை ஊடகங்க ளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவை தள மாகக் கொண்ட வங்கி ஒன்றின் ஊடாக இந்த திட்டத்திற்கான நிதி வழங்கப்படவுள்ளதுடன் தலா 50 இலட்சம் ரூபா செல வில் முற்றுமுழுதாக இலவச மாக பயனாளர்களுக்கு இந்த வீடுகள் நிர்மாணித்துக் கொடுக் கப்படவுள்ளன.

வீட்டுத் திட்டத்தை நடை முறைப்படுத்தவுள்ள சன் பவர் குழுமத்தினால் சுமார் நான் காயிரம் ஏக்கர் காணியில் சூரிய மின்கல பூங்கா நிர்மாணிக் கப்படவுள்ளது. இதற்கான முழு மையான காணி விடுவிக்கப்பட வேண்டியுள்ளது. இதே வேளை சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை கடன் விடுவிப்பு தொடர்பான சான் றுப்படுத்தல் பெறப்படவுள்ளது. இந்த இரண்டு செயற்பாடுகளும் இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இலவச வீட்டு திட்டத்திற்கான நடவடிக்கை கள் முன்னெடுக்கப்படவுள் ளன.

வீடு முழுமையாக நிர் மாணிக்கப்பட்டதன் பின்னரே பயனாளர்களிடம் கையளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்குரிய முன்மொழி விற்கான அனைத்து அனு மதிகளும் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)



வடமராட்சி துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய 17 ஆம் திருவிழாவான கேணித்தீர்த்தம் கடந்த புதன்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (படம்-மகாலிங்கம்)

# உரமானியப் பதிவும் கலந்துரையாடலும்

(சாவகச்சேரி)

கைதடி கமநலசேவை நிலைய எல்லைக்குட்பட்ட நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பிற்கு உட்பட்ட நெற் செய்கையாளர்களுக்கான காலபோக நெற்செய்கைக்கான கலந்துரையாடலும் 2024-25 ஆம் ஆண்டிற்கான உரமா னியப் பதிவும் நாளை மறு தினம் புதன்கிழமை நாவற் குழி கிழக்கு பொதுநோக்கு மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள் ளது.

பதிவுகளை மேற்கொள்ள வருகின்ற விவசாயிகள் தேசிய அடையாள அட்டை, நடப்பாண் டிற்கான ஏக்கர் வரி பற்றுச்சீட்டு, பயன்பாட்டில் உள்ள வங்கிப் புத்தகம் மற்றும் கமக்கார அமைப்பில் சந்தா பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் வருகை தருமாறு நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.(6-30)

# சின்னம் சூட்டும் நிகழ்வு

(கரணவாய்)

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான சின் னம் சூட்டும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி யின் ராஜசிங்கம் மண்ட பத்தில்நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் செல்வி.ராஜ்யலக்ஸ்மி சுப் பிரமணிய குருக்கள் தலை மையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல் கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரை யாளர் கலாநிதி நாமகள் கிருஷ்ணபிள்ளை கலந்து கொள்ளவுள்ளார். (6-60)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல் கலைக்கழகத்தினால் நடத் தப்படும் சமூக விஞ்ஞானத் தில் உயர் சான்றிதழ் கற் கைநெறி 2024/2025 விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்பு வோர் தரம் 9 வரையான கனிஸ்ட இரண்டாம் நிலை அல்லது அதற்கு சமமான பாடசாலைக்கல்வி அல்லது ஆரம்பக்கல்வி பூர்த்தியுடன் குறைந்தது 2 வருடங்க ளுக்கு சமமான சான்ற ளிக்கப்பட்ட தொழில் அனு பவம் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத் தின் மூதவை சபையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய கல்வித் தகுதி அல்லது உயர்கல்வித்தகுதி மற்றும் 18 வயதிற்கு மேற்பட் டவராக இருத்தல் வேண் டும்.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 30.09.2024 வரை விண் ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரி மற்றும் 021-222 3374 தொலைபேசியூடாவும் தொடர்பு கொண்டு விண் ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப் பாளர் அறிவித்துள்ளார். (6)

# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள அரியாலை பொது சுகாதாரப் பரிசோ தகர் பிரிவுக்குப்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றுவ தற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அறிவித் துள்ளார். (6)

| திகதி | நேரம் | தடுப்பு மருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 26.09.2024 | மு.ப. 9.00-மு.ப. 11.00 | அரியாலை சனசமூக நிலையம் புங்கன் குளம் வீதி |
| | மு.ப. 11.00- பி.ப01.00 | பென்ரிகேஸ் லேன் |
| | பி.ப. 02.30- பி.ப 04.00 | தியாகராசா படிப்பகம் கண்டி வீதி அரியாலை |
| 27.09.2024 | மு.ப. 9.00-மு.ப. 11.00 | சரஸ்வதி சனசமூக நிலையம் கண்டி வீதி அரியாலை |
| | மு.ப. 11.00- பி.ப01.00 | மிருக வைத்திய நிலையம் A.V. ROAD அரியாலை |
| | பி.ப. 02.30- பி.ப 04.00 | பிரப்பங்குளம் அம்மன் கோவிலடி இலந்தைக்குளம் வீதி |
| 30.09.2024 | மு.ப. 9.00-மு.ப. 11.00 | கலைமகள் சனசமூக நிலையம் அரியாலை |
| | மு.ப. 11.00- பி.ப01.00 | காந்தி சனசமூக நிலையம் அரியாலை |
| | பி.ப. 02.30- பி.ப 04.00 | அருணோதயா சனசமூக நிலையம் அரியாலை |
| 01.10.2024 | மு.ப. 9.00-மு.ப. 11.00 | திருமகள் சனசமூக நிலையம் அரியாலை |
| | மு.ப. 11.00- பி.ப01.00 | மலர்மகள் சனசமூக நிலையம் அரியாலை |
| | பி.ப. 02.30- பி.ப 04.00 | பாரதி சனசமூக நிலையம் நாயன்மார்கட்டு செம்மணி வீதி |
| 02.10.2024 | மு.ப. 9.00-மு.ப. 11.00 | அம்பாள் சனசமூக நிலையம் பேச்சி அம்மன் கோவிலடி |
| | மு.ப. 11.00- பி.ப01.00 | மகேஸ்வரி பாடசாலை அருகில் நாயன்மார்கட்டு |
| | பி.ப. 02.30- பி.ப 04.00 | கலைவாணி சனசமூக நிலையம் பொன்னம்பலம் வீதி |
| 03.10.2024 | மு.ப. 9.00-மு.ப. 11.00 | முள்ளி வீதி அரியாலை |
| | மு.ப. 11.00- பி.ப01.00 | ஆள்காட்டி வீதி அருளம்பலம் வீதி சந்தி |
| | பி.ப. 02.30- பி.ப 04.00 | இராஜேஸ்வரி வீதி அரியாலை |
| 04.10.2024 | மு.ப. 9.00-மு.ப. 11.00 | கனகரட்னம் வீதி நாவலர் வீதிச்சந்தி அரியாலை |
| | மு.ப. 11.00- பி.ப01.00 | கனகரட்னம் மகா வித்தியாலயம் அருகில் நாவலர் வீதி |
| | பி.ப. 02.30- பி.ப 04.00 | பாரதி வீதி முதலியார் வீதிச்சந்தி அரியாலை |
| 07.10.2024 | மு.ப. 9.00-மு.ப. 11.00 | கச்சேரி நல்லூர் வீதி றக்கா வீதிச்சந்தி அரியாலை |
| | மு.ப. 11.00- பி.ப01.00 | பேரின்நாயகம் வீதி அரியாலை |
| | பி.ப. 02.30- பி.ப 04.00 | கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதிச் சந்தி |
| 08.10.2024 | மு.ப. 9.00-மு.ப. 11.00 | சாஸ்திரியார் வீதி அரியாலை |
| | மு.ப. 11.00- பி.ப01.00 | அருளம்பலம் வீதி (சந்தனமாதா ஒழுங்கை) |
| | பி.ப. 02.30- பி.ப 04.00 | கச்சேரி கிழக்கு புகையிரத பாதை (ஒழுங்கை) |




அளவையியல் மெய்யியல் பேராசான் சுப்பிரமணியம் சயந்தனின் மணிவிழா நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் திருமண மண்டபத்தில் நடை பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25,353 வாக்குகள்
## யாழ். மாவட்டத்தில் நிராகரிப்பு
### பதில் மாவட்டச் செயலர் பிரதீபன்



(யாழ்ப்பாணம்)

யாழ் தேர்தல் மாவட் டத்தில் அளிக்கப்பட்ட மொத்த வாக்கு களாக 3 இலட்சத்து 97 ஆயி ரத்து 41 வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில் 25 ஆயிரத்து 353 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட தெரிவத் தாட்சி அலுவலரும் பதில் மாவட்ட செயலாளருமான மரு தலிங்கம் ம.பிரதீபன் தெரிவித்தார்.

யாழ் .மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் 3 இலட்சத்து 71 ஆயிரத்து 688 செல்லுபடியான வாக் குகள் அளிக்கப்பட்ட நிலையில், வேட்பாளர்களான சஜித் பிரேமதாச 1 இலட் சத்து 21 ஆயிரத்து 177 வாக்குகளும், பா.அரிய நேத்திரன் 1 இலட்சத்து 16 ஆயிரத்து 688 வாக்கு களும், ரணில் விக்கிரம சிங்க 84 ஆயிரத்து 558 வாக்குகளும், அநுரகுமார திஸா நாயக்க 27 ஆயிரத்து 086 வாக்குகளை யும் பெற்றனர்.

அதேவேளை, ஏனைய வேட்பாளர்கள் மொத்தமாக 22 ஆயிரத்து 179 வாக்கு களையும் பெற்றுள்ளனர் என அவர் மேலும் தெரி வித்தார். (6)

# ஊரடங்கு வேளை
## வெளியே நடமாடியோரை
### எச்சரித்த பொலிஸார்

(மன்னார்)

நாடளாவிய ரீதியில் தேர்தலுக்கு பின்னரான பாதுகாப்புக்கு என ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நண்பகல் வரை குறித்த ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நிலையில் பின்னர் நீக்கப் பட்டது.

அந்த வகையில் மன்னார் மாவட்டத்திலும் முழுமையான ஊரடங்குச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் உரிய அனுமதி இன்றி நடமாடிய பொதுமக்கள் எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதுடன் வியாபார நிலையங்கள் மூடப்பட்டுள்ள நிலையில் பொதுப்போக்கு வரத்தும் நிறுத்தப்பட்டிருந்தது.

அதே நேரம் மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இராணுவம் மற்றும் பொலிஸார் விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு இருந்தனர். (6)

# வாக்களிப்பு நிலையத்தில்
## வாக்காளர்கள் அசௌகரியம்

(நுவரெலியா )

நுவரெலியா - மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் நோர்வூட் நியுவெளி இலக்கம் 205 வாக்களிப்பு நிலையமானது வாக் காளர்களுக்கு பல விதங்களி லும் அசௌ கரியத்தை ஏற்ப டுத்திய ஒன்றாக விளங்கியுள்ளது.

நியுவெளி தோட்டத்தின் பழைய தேயிலை தொழிற்சாலையே இப்பகுதியின் வாக்களிப்பு நிலையமாக தெரிவு செய்யப்பட்டிருந்தது.

தொழிற் சாலையின் மேற்பகுதியில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய் யப்பட்டிருந் தாலும் இரும்பிலான படிக்கற்களில் வாக் காளர்கள் ஏறுவதற்கு மிகவும் சிரமப்பட்ட தையும், வயதான வாக்காளர்கள் சிலர் படிக்கற்களில் ஏற முடியாமல் திரும்பிச் சென்றதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மேலும் வாக்களிப்பு நிலையத்தின் உட்புறம் மிக குறுகியதாக இருப்ப தால் தாம் பணிகளை மேற் கொள்ள சிரமங்களை எதிர் கொண்டதாக மேற்படி வாக் களிப்பு நிலைய சிரேஷ்ட தலைமை தாங்கும் அலு வலர் உட்பட பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்ட பொலி ஸாரும் தெரிவித்தனர். (6)

# கடைக்குள் புகுந்து கொள்ளை
## பொலிஸில் முறைப்பாடு

(ஹற்றன்)

ஹற்றன் மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள தள பாடங்கள் மற்றும் இலத் திரனியல் உபகரணங்கள் விற்பனை செய்யப்படும் கடையொன்றில் கடந்த வெள்ளிக் கிழமை கொள்ளைச் சம் பவம் ஒன்று இடம்பெற் றுள்ளது.

கடையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த கைக் கடிகாரங்கள் உட்பட பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஹற்றன் பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் தேடுதல் வேட்டையை முன்னெடுத்துள்ளதாகவும் திருடர்கள் கடையின் பின்புறமாகவே கடையினுள் நுழைந்துள்ள தாகவும்,சம்பவம் தொடர்பாக கடையில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கமராவில் காணொளிகள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரிய வந்துள்ளன. (6)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3228

கார்த்திகேயன்




அக்‌ஷயன்




கிஷாளினி




டர்சிகா




மயூரன்




டஜின்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஜனாதிபதித் தே

## யாழ்ப்பாண மாவட்டம்

| | |
|---|---|
| சஜித் பிரேமதாச | : 121, 177 |
| அரியநேத்திரன் பாக்கியசெல்வம் | : 116, 688 |
| ரணில் விக்கிரமசிங்க | : 84, 558 |
| அநுரகுமார திஸாநாயக்க | : 27, 086 |

## புத்தளம் மாவட்டம்

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | : 207, 134 |
| சஜித் பிரேமதாச | : 173, 382 |
| ரணில் விக்கிரமசிங்க | : 60, 719 |
| நாமல் ராஜபக்ஷ | : 13, 285 |

## குருநாகல் மாவட்டம்

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | : 544, 763 |
| சஜித் பிரேமதாச | : 368, 290 |
| ரணில் விக்கிரமசிங்க | : 146, 520 |
| நாமல் ராஜபக்ஷ | : 38, 730 |

## கம்பஹா மாவட்டம்

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | : 809, 410 |
| சஜித் பிரேமதாச | : 349, 550 |
| ரணில் விக்கிரமசிங்க | : 216, 028 |
| நாமல் ராஜபக்ஷ | : 41, 193 |
| திலித் ஜயவீர | : 17, 143 |

## திகாமடுல்ல மாவட்டம்

| | |
|---|---|
| சஜித் பிரேமதாச | : 201, 814 |
| ரணில் விக்கிரமசிங்க | : 138, 619 |
| அநுரகுமார திஸாநாயக்க | : 105, 057 |
| நாமல் ராஜபக்ஷ | : 8, 821 |

## கேகாலை மாவட்டம்

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | : 247, 179 |
| சஜித் பிரேமதாச | : 185, 930 |
| ரணில் விக்கிரமசிங்க | : 106, 510 |
| நாமல் ராஜபக்ஷ | : 11, 722 |

## வன்னி மாவட்டம்

| | |
|---|---|
| சஜித் பிரேமதாச | : 95, 422 |
| ரணில் விக்கிரமசிங்க | : 52, 573 |
| அரியநேத்திரன் பாக்கியசெல்வம் | : 36, 377 |
| அநுரகுமார திஸாநாயக்க | : 21, 412 |

## இரத்தினபுரி மாவட்டம்

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | : 291, 708 |
| சஜித் பிரேமதாச | : 257, 721 |
| ரணில் விக்கிரமசிங்க | : 145, 038 |
| நாமல் ராஜபக்ஷ | : 20, 575 |

## அநுராதபுர மாவட்டம்

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | : 285, 944 |
| சஜித் பிரேமதாச | : 202, 289 |
| ரணில் விக்கிரமசிங்க | : 82, 152 |
| நாமல் ராஜபக்ஷ | : 15, 029 |

## பதுளை மாவட்டம்

| | |
|---|---|
| சஜித் பிரேமதாச | : 219, 674 |
| அநுரகுமார திஸாநாயக்க | : 197, 283 |
| ரணில் விக்கிரமசிங்க | : 115, 138 |
| நாமல் ராஜபக்ஷ | : 13, 869 |

## நுவரெலியா மாவட்டம்

| | |
|---|---|
| சஜித் பிரேமதாச | : 201, 814 |
| ரணில் விக்கிரமசிங்க | : 138, 619 |
| அநுரகுமார திஸாநாயக்க | : 105, 057 |
| நாமல் ராஜபக்ஷ | : 8, 821 |

## மஹாநுவர மாவட்டம் (கண்டி)

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | : 394, 534 |
| சஜித் பிரேமதாச | : 323, 998 |
| ரணில் விக்கிரமசிங்க | : 162, 707 |
| நாமல் ராஜபக்ஷ | : 19, 403 |

## மட்டக்களப்பு மாவட்டம்

| | |
|---|---|
| சஜித் பிரேமதாச | : 139, 110 |
| ரணில் விக்கிரமசிங்க | : 91, 132 |
| அநுரகுமார திஸாநாயக்க | : 38, 832 |
| அரியநேத்திரன் பாக்கியசெல்வம் | : 36, 905 |

## மாத்தறை மாவட்டம்

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | : 287, 662 |
| சஜித் பிரேமதாச | : 147, 462 |
| ரணில் விக்கிரமசிங்க | : 79, 249 |
| நாமல் ராஜபக்ஷ | : 14, 962 |

## அம்பாந்தோட்டை மாவட்டம்

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | : 221, 913 |
| சஜித் பிரேமதாச | : 131, 503 |
| ரணில் விக்கிரமசிங்க | : 33, 217 |
| நாமல் ராஜபக்ஷ | : 26, 707 |

## மொனராகலை மாவட்டம்

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | : 140, 269 |
| சஜித் பிரேமதாச | : 134, 238 |
| ரணில் விக்கிரமசிங்க | : 35, 728 |
| நாமல் ராஜபக்ஷ | : 12, 832 |

## மாத்தளை மாவட்டம்

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | : 140, 544 |
| சஜித் பிரேமதாச | : 121, 803 |
| ரணில் விக்கிரமசிங்க | : 53, 829 |
| நாமல் ராஜபக்ஷ | : 10, 327 |

## திஸாநாயக்க முதிய

**பிறப்பு : 24 நவம்பர் 1**

**கல்லூரி: களனி பல்க**

**அரசியல் கட்சி: மக்க**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் - 2024



### திருகோணமலை மாவட்டம்

| | |
|---|---|
| சஜித் பிரேமதாச | : 120,588 |
| அநுரகுமார திஸாநாயக்க | : 49, 886 |
| ரணில் விக்கிரமசிங்க | : 40, 496 |
| அரியநேத்திரன் பாக்கியசெல்வம் | : 18, 524 |

### பொலன்னறுவை மாவட்டம்

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | : 130, 880 |
| சஜித் பிரேமதாச | : 100, 730 |
| ரணில் விக்கிரமசிங்க | : 36, 908 |
| நாமல் ராஜபக்ஷ | : 5, 594 |

### காலி மாவட்டம்

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | : 366, 721 |
| சஜித் பிரேமதாச | : 189, 555 |
| ரணில் விக்கிரமசிங்க | : 107, 336 |
| நாமல் ராஜபக்ஷ | : 24, 382 |

### கொழும்பு மாவட்டம்

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | : 629, 963 |
| சஜித் பிரேமதாச | : 342, 108 |
| ரணில் விக்கிரமசிங்க | : 281,436 |
| நாமல் ராஜபக்ஷ | : 30, 432 |

### களுத்துறை மாவட்டம்

| | |
|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | : 387, 764 |
| சஜித் பிரேமதாச | : 236, 307 |
| ரணில் விக்கிரமசிங்க | : 143, 285 |
| நாமல் ராஜபக்ஷ | : 22, 727 |

## தனிப்பட்ட விடயங்கள்

தியான் சிலாகே அநுரகுமார திஸாநாயக்க

ர் 1968

ல்கலைக்கழகம்

க்கள் விடுதலை முன்னணி/ தேசிய மக்கள் சக்தி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 8 ஆண்டுகளுக்கு பிறகு தென்பட்ட பனிக்கரடி

## சுட்டுக்கொன்ற பொலிஸார்





(ஐஸ்லாந்து)

ஐஸ்லாந்து நாட்டில் 8 வருடங்களுக்கு பிறகு தென்பட்ட பனிக்கரடியை பொலிஸார் சுட்டு கொன்றனர்.

பனிக்கரடியால் உள்ளூர் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தினால் சுட்டு கொன்றோம் என்று பொலிஸார் விளக்கம் அளித்தனர்.

பனிக்கரடிகள் ஐஸ்லாந்தை பூர்வீகமாக கொண்டவை அல்ல. ஆட்டிக் பனிப் பிரதேசத்தில் தான் அதிகளவிலான பனிக்கரடிகள் வாழ்கின்றன. கிறீன்லாந்தில் இருந்து உருகும் பனிக்கட்டிகள் வழியே பனிக்கரடிகள் ஐஸ்லாந்திற்கு வருகின்றன. கடைசியாக 2016 ஆம் ஆண்டு தான் ஐஸ்லாந்தில் பனிக்கரடி காணப்பட்டது. 9 ஆம் நூற்றாண்டில் இருந்து இப்போது வரை ஐஸ்லாந்தில் 600 பனிக்கரடிகள் காணப்பட்டதாக சொல்லப்படுகிறது. (நி)

## ஜப்பானில்

# வெள்ளப் பெருக்கு அபாயம்

(டோக்கியோ)

ஜப்பானில் பலத்த மழையினால் வெள்ளப்பெருக்கு ஏற்படும் என வானிலை முன்னறிவிப்பாளர்கள் எச்சரித்துள்ளனர். இதனால் மத்திய ஜப்பானில் இரண்டு நகரங்களிலுள்ள 30,000 பேரை வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜப்பானில் ப்ல மாகாணங்களில் பலத்த மழை குறித்து அதிஉயர் எச்சரிக்கை அந்நாட்டு வளிமண்டலவியல் திணைக்களத்தினால் விடுக்கப்பட்டுள்ளது.

12 ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்து கரையைக் கடந்துள்ளதாக ஜப்பானின் பொது ஒளிபரப்பு நிறுவனமான NHK தெரிவித்துள்ளது.

குறித்த பகுதிகள் புத்தாண்டு அன்று 7.5 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் பாதிக்கப்பட்டு தற்போது தான் மீண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 150-230 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 250-300 | 300 |
| தக்காளி | 160 | 180 | 220 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 240 | 150-300 | 200 |
| கோவா | 230 | 300 | 250 | 300 |
| கரட் | 200 | 350 | 270 | 300 |
| பூசணி | 80 | 50 | 40-60 | 80 |
| புடோல் | 80 | 140 | 100 | 300 |
| வாழைக்காய் | 150 | 200 | 200-220 | 300 |
| சின்ன வெங்காயம் | 320 | 300 | 150-300 | 350 |
| பெரிய வெங்காயம் | 280 | 200 | 260 | 250 |
| பாகற்காய் | 400 | 350 | 350 | 600 |
| வெண்டக்காய் | 80 | 100 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 400 | 250-300 | 600 |
| லீக்ஸ் | 320 | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 100 | 100 | 80-120 | 160 |
| கறிமிளகாய் | 400 | 500 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 650 | 400-550 | 400 |
| போஞ்சி | 400 | 500 | 270 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 150 | 80 | 70 | 150 |
| தேசிக்காய் | 500 | 400 | 450-550 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 150 | 90-140 | 100-140 |
| இராசவள்ளி | -- | 900 | 600 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | -- | -- |

## இன்று ஒரு தகவல் 229



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# சங்கீத சங்கடம்

எனக்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருவர் என்னைத் தேடி திடீர் என்று ஒரு நாள் வந்தார். என்ன விடயம் என்று கேட்டேன். நாதஸ்வரம் வாசிக்க கற்றுக் கொள்லாமா என்று யோசிக்கின்றேன் என்றார். சங்கீத சீசன் இல்லையா? பல பேர் வாசிப்பதை பார்த்திருக்கிறார் போல இருக்கிறது.

நான் மிகவும் பயந்து போய்விட்டேன். ஏன் என்றால் அவருடைய சாமர்த்தியம் எவ்வளவு என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவரை அருகிலே உட்கார வைத்து மெதுவாக அறிவுரை செய்ய ஆரம்பித்தேன். இதோ பாருங்கள் உங்களுக்கு எதற்கு இந்த விபரீத ஆசை. சங்கீதம் என்பது ஒரு சுகமான அனுபவம். நாமல்லாம் சங்கீதம் கற்றுக் கொள்ள ஆசைப்பட்டு நாங்களும் கஷ்ரப்பட வேண்டாம் சங்கீதத்தையும் கஷ்ரப்படுத்த வேண்டாம் என்றேன். அவர் அதை எல்லாம் காதிலே வாங்கிக் கொள்கின்ற மாதிரித் தெரியவில்லை. எப்படியும் நாதஸ்வரம் வாசிக்க கற்றுக்கொண்டே ஆக வேண்டும் என்கின்ற மாதிரி பேசினார்.

சரி வேறு வகையிலே முயற்சி செய்து பார்க்கலாம் என்று யோசித்து ஒரு நேயர் எனக்கு தெரிவித்திருந்த ஒரு கதையை அவரிடம் சொன்னேன். அந்தக் கதை என்னவென்றால் ஒரு ஊரிலே ஒரு கோயில் அந்தக் கோயிலிலே ஒரு ஸ்தல விருட்சம். அந்த மரத்திலே ஒரு பிரம்ம ராட்ஷசன். ஒரு காலத்திலே நிறையப் பாவங்கள் எல்லாம் செய்து விட்டு சாபம் வாங்கி பிரம்ம ராட்ஷசனாக மாறியவன் அவன். சாப விமோசனத்திற்காக அந்த மரத்திலே காத்துக் கொண்டு இருக்கின்றான். நல்ல புத்தி ஞானம் உள்ள நபர் தான் ஏதோ போதாத காலம் பாவம் செய்து விட்டு இப்படி ஆகிவிட்டார். பிரம்ம ராட்ஷசனான அவனைக் கண்ணாலே பார்க்க முடியாது. அவனுக்கு உருவம் கிடையாது. அந்தக் கோயிலிலே உள்ள ஸ்தல விருட்சத்தில் அவன் இருந்து கொண்டு இருக்கின்றான்.

ஒரு பேய் மாதிரி என்று வைத்துக்கொள்ளுங்களேன்! அந்தக் கோயிலில் தினமும் நாதஸ்வரம் வாசிக்கின்ற ஒருவர் வாசிக்கிறார் என்று கூட சொல்ல முடியாது. ஊதுவார் அவ்வளவு தான். முறையான பயிற்சி இல்லாதவர் அவர். நமது நபர் மாதிரி அவரும் திடீரென்று ஆசைப்பட்டு கற்றுக்கொண்டாரோ என்னமோ! அவருடைய வாசிப்பை சகித்துக் கொள்கிறது கடினம். அவர் தினமும் காலை, மாலை கோயிலிலே வாசிப்பார். பிரசாதம் கொடுப்பார்கள். வாங்கி சாப்பிடுவார். மறுபடியும் வாசிப்பார். இப்படியே அவருடைய காலம் ஓடிக்கொண்டிருந்தது.

ஒரு நாள் அந்தக் கோயிலில் மிகவும் நீண்ட நேரம் அவர் வாசித்து விட்டு இரவு வீட்டிற்குச் சென்றார். அப்பொழுது அந்த மரத்திலே இருந்த பிரம்ம ராட்ஷசன் அதாவது பேய் அவரிடம் பரிதாபமாக பேச ஆரம்பித்தது. இதோ பார்ரப்பா என்னை நீ கண்ணாலே பார்க்க முடியாது இருந்தாலும் உன்னுடைய வாசிப்பை வேறு வழியில்லாமல் தினமும் நான் கேட்டுக்கொண்டு தான் இருக்கின்றேன். எனக்கு ஒரு உதவி செய்வீர்களா என்று கேட்டது.

என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார் இவர். இனிமேல் நீ வாசிப்பதை விட்டு விட வேண்டும் என்றது. ஏன் அப்படி சொல்கிறாய் என்று பரிதாபமாக கேட்டார் இவர். நான் ஏற்கனவே ஒரு பாவம் செய்து விட்டு பிரம்ம ராட்ஷனாக மாறி சாபவிமோசனத்திற்காக காத்துக்கொண்டு இருந்தாலும் சங்கீத ஞானம் உள்ளவன் தான். நீ வாசிப்பது கொஞ்சம் கூட நன்றாக இல்லை. அபஸ்வரமாக இருக்கிறது.

என்னாலே சகித்துக்கொள்ள முடியவில்லை இதேபோல் நீ தினமும் வாசித்து அதை நான் கேட்டுக் கொண்டு வந்தால் சாபவிமோசனம் கிடைப்பதற்குள் இங்கேயே நான் இறந்து போனாலும் போயிடுவேன். இப்போதே தினமும் உன் வாசிப்பைக் கேட்டுக் கேட்டு துரும்பாக இளைத்துவிட்டேன்என்றது. பாவம் நீ சொல்வதெல்லாம் சரிதான் ஒத்துக்கொள்கிறேன் நான் வாசிப்பதை என்னாலேயே கூட சகிக்கமுடியவில்லைதான் இருந்தாலும் இதை விட்டால் எனக்கு வேறு எந்த தொழிலும் தெரியாது. உணவிற்கே நான் இதைத்தானே நம்பியிருக்கின்றேன் இதை விட்டுவிட்டு என்னசெய்வது என்றார் அவர்.

உனக்கு சாப்பாட்டிற்கு ஏதாவது வழி செய்தால் இந்த வாசிப்பை விட்டுவிடுவியா என்று கேட்டது அது. விட்டுவிடுவேன் என்றார் இவர். அப்படி என்றால் நான் சொல்வதைக் கேள். இந்த ஊர் ராஜாவின் மகளை போய் நான் பிடித்து விடுகிறேன். தன் மகளுக்கு பேய் பிடித்து இருக்கிறது என்று தெரிந்தவுடனே அந்த ராஜா ஊரிலே உள்ள மந்திரவாதிகளையெல்லாம் கூப்பிட்டு பேய் ஓட்டுவார். நான் யாருக்கும் அசைந்து கொடுக்காமல் இருந்து கொள்கின்றேன்.

சிறிது நாட்கள் கழித்து நீ அந்த அரண்மனைக்கு வா... நான் அரசகுமாரிக்கு பிடித்து இருக்கிற பைத்தியத்தை சரி செய்கிறேன் என்று சவால் விடு. அதன் பின் நாதஸ்வரத்தை வாசி. நான் அந்த பெண்ணை விட்டுவிட்டு வந்து விடுவேன். உடனே ராஜா உன்னுடைய திறமையைப் பாராட்டி நிறையப் பொன்னும் பொருளும் கொடுப்பார். அதை வைத்துக் கொண்டு நீயும் உன் பரம்பரையும் சௌக்கியமாக காலம் தள்ளலாம். என்று யோசனை சொல்லியது. இவரும் யோசித்து பார்த்தார். இது மிகவும் திறம் என்று தோன்றியது. சரி என்று ஒத்துக்கொண்டார். இந்த திட்டத்தின் படியே எல்லாம் நடந்தது. ராஜா நிறையப் பரிசு கொடுத்தார். இவரும் நாதஸ்வரம் வாசிப்பதை விட்டு விட்டார்.

இந்தக் கதையை எதிரிலே உட்கார்ந்திருக்கிற நண்பரிடம் கூறினேன். அப்படியும் அவர் நாதஸ்வரம் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆசையை கைவிட்டதாகத் தெரியவில்லை. சரி இவரை எப்படி சரி செய்வது என்று யோசித்துப் பார்த்தேன். கடைசியாக ஒரு விடயத்தை சொன்னேன். அதைக்கேட்ட பிறகு தான் சரி அப்படி என்றால் நான் நாதஸ்வரம் கற்றுக் கொள்ளும் யோசனையை கைவிட்டு விடுகிறேன் என்று ஒத்துக் கொண்டார்.

நான் என்ன சொன்னேன் தெரியுமா? நீங்கள் நாதஸ்வரம் வாசிக்க கற்றுக் கொள்வது என்று முடிவு செய்தால் உங்களுடன் வாசிப்பதற்கு உதவியாக நான் கூட தவில் வாசிக்க கற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கின்றேன் என்று சொன்னேன். அவ்வளவு தான்!ஆள் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# பேரீச்சம்பழம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name- Phoenix Dactylifera

family- Palmaceae

உயரமான மரம் கிட்டத்தட்ட 10-15 வயதுடைய மரங்களிலிருந்தே பழங்களை அறுவடை செய்யலாம்.

காலநிலை மாறு பாட்டிற்கமைய ஒரு மரத்திலிருந்து பெறப்படும் பழங்களின் எண்ணிக்கை வேறுபடும்.

கிட்டத்தட்ட ஒரு மரத்திலிருந்து 50-250 கிலோ கிராம் பழங்களை பெற்றுக் கொள்ளலாம்.

பெரியளவில் பரம்பல் எமது பிரதேசத்தில் இல்லாவிட்டாலும் குடத்தனை, அராலி பிரதேசங்களில் ஆங்காங்கு குலைகளுடன் கூடிய பேரீச்சம் மரங்களை காணக்கூடியதாக இருந்தது.


இருந்தாலும் உலர் பழங்களாக பேரீச்சம் பழங்களை வாங்கக் கூடியதாக உள்ளது. ஈரானிலும் அதனைச் சுற்றியுள்ள நாடுகளிலும் பேரீச்சம்பழம் உணவாக கருதப்படுகின்றது. உலர்ந்த நல்ல வகை பழங்களையே இவர்கள் உணவாக உட்கொள்வதுண்டு.

இது நல்ல போசணையை உண்டாக்குவதுடன் இரத்தத்தை விருத்தி செய்யக்கூடிய பழ உணவாகும். மருத்துவ பண்புகளும் நிறைந்தது. பொதுவாக பேரீச்சம்காய்களை கூட சித்த மருத்துவத்தில் பல மருந்துகளில் சேர்க்கப்படுகிறது. பொதுவாக வைரஸ் தொற்றுக்களால் ஏற்படும் காய்ச்சல் நிலைமைகளில் பேரீச்சம்காய் முக்கிய மூலப்பொருளாக சேர்க்கப்படுகிறது.

சாதாரண ஒருவர் ஒரு நாளைக்கு 3-4 பேரீச்சம் பழங்கள் சாப்பிடலாம். பழங்களைத் தெரிவு செய்யும் போது உடன் பழங்கள் சிறந்தது.

பழங்களின் தோல்களில் சுருக்கம் காணப்பட வேண்டும் ஆனாலும் வெடிப்புக்கள் இருக்கக் கூடாது. பேரீச் சம் காயை விதை நீக்கி தேனில் ஊற வைத்து 48 நாட்கள் தினமும் அதிகாலையில் உண்டு வர மாரடைப்பு, வாயுக்கோளாறுகள் குணமாகும்.

பேரீச்சம்காய் 50 கிராம் எடுத்து விதை நீக்கி அதனுடன் சுக்கு, சிறுநாகப்பூ, கசகச ஒவ்வொன்றும் 25



கிராம் எடுத்து பொடி செய்து 5 கிராம் பொடியை தினமும் 2 வேளை சாப்பிட்டு வர மூலத்துடன் இரத்தம் வெளியேறுதல் குணமாகும்.

குருதிச் சோகைக்கும் சிறந்தது. பேரீச்சம்பழத்தை தினமும் சாப்பிட்டு வர அதிகரித்த பித்தம் தணியும். மலச்சிக்கல் நீங்கும். ஞாபக சக்தி அதிகரிக்க பேரீச்சம் பழத்தை தேனில் ஊற வைத்து பசுப்பாலில் வேக வைத்து 40 நாட்களும் பயன்படுத்த வேண்டும்.

பேரீச்சம் பிஞ்சு துவர்ப்பு சுவையுடையது. குடற்புழுக்களை அகற்றும் தன்மை வாய்ந்தது. பேரீச்சம் பிஞ்சு வெற்றிலைக் காம்பு வாய்விடங்கம் இவற்றை ஒரேயளவாக எடுத்து நான்கு பங்கு நீர் விட்டு கால்பங்கை வற்றக் காய்ச்சி 200 மில்லி இரவில் எடுக்க குடற்புழுக்கள் வெளி யேறும்.

பேரீச்சம் பழங்களை நீளவாக்கில் பிளந்து விதைகளை நீக்கி பாதாம் பருப்பை அதனுள் வைத்து மூடி கடலை மாவில் தோய்த்து நெய்யில் பொரித்து தினமும் 1-2 பழங்கள் சாப்பிட்டு வர உடலை பலப்படுத்துவதுடன் தாதுக்களை பலப்படுத்தி உடலில் நிர்ப்பீடனத்தை அதாவது நோய் எதிர்ப்பு சக்தியையும் இரத் தத்தையும் விருத்தி செய்யக்கூடியது.

பேரீச்சம்பழத்தில் உயிர்ச்சத்து A, கரோட்டீன், உயிர்ச்சத்து B6, B12, கல்சியம், இரும்புச்சத்து, பொட்டாசியம், பொஸ்பரஸ், மக்னீசியம், போன்ற போசணைக் கூறுகள் அதிகம் காணப்படும்.

கரையக்கூடிய, கரையமுடியாத நார்ச்சத்துக்கள் அதிக மாகக் காணப்படும். இதனால் மலக்கட்டை நீக்கக்கூடியதாக இருக்கும். இதில் காணப்படும் Organic Sulphor ஒவ்வாமையை நீக்கக் கூடியதாக இருக்கும். உயிர்ச்சத்து B அதிகமாகக் காணப்படுவதால் நரம்புகளை பலப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

கல்சியம், மக்னீசியம், தாதுச்சத்துக்கள் என்புகளைப் பலப்படுத்தும். பற்களை உறுதியாக வைத்திருக்க உதவும். பொதுவாக இப்பழங்களில் காணப்படும் உயிர்ச்சத்து A, glutein சீசான்தின் போன்றவை கண்பார்வையை தெளிவாக்கும். மாலைக்கண் நோய் வராமல் தடுக்கும். கர்ராக்ட் நோய்கண்ணில் வருவதையும் தடுக்கும். பேரீச்சம்பழத்தில் காணப்படும் வெலேனியம், பிளேவனொயிட்டு போன்றவை புற்றுநோய்கள் வருவதை தடுக்கக் கூடியது.

பெரும்பாலும் பெருங்குடல் நோய் வருவதை தடுக்கக் கூடியது. அத்துடன் நிர்ப்பீடனத்தை அதிகரிக்கக் கூடும்.

கர்ப்பிணிப் பெண் கர்ப்ப காலத்தில் இறுதி 3 மூன்று மாதங்களில் பெரும்பாலும் தினமும் 2-3 பேரீச்சம் பழங்களை சாப்பிட்டு வர பிள்ளைப் பேறை இலகுவாக்குவதுடன் பிள்ளை பெற்ற பின்பு ஏற்படும் இரத்தப் போக்கை குறைக்க கூடியதாக வும் உள்ளது. இவை ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

நீரிவு நோயாளிகள் பேரீச்சம் பழம் சாப்பிடலாமா? அதாவது இரத்தத்தில் சர்க்கரையின் அளவு கட்டுப்பாட்டிலே உள்ளவர்கள், மருந்தை ஒழுங்காக சாப்பிடுபவர்கள் உடன் பேரீச்சம் பழம் 2 தினமும் சாப்பிடலாம். ஏனெனில் இதில் நிறைய தாதுப்புக்கள் உண்டு.

உதாரணமாக இதில் காணப்படும் பொட்டாசியம் இரத்த அமுக்கத்தையும் சீராக பேண உதவும். மாரடைப்பு வரும் அபாயத்தை குறைக்கும்.

அத்துடன் உயிர்ச்சத்து B அதிகமாக இருப்பதால் நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்படும் பாத விறைப்பு போன்றவற்றின் தாக்கத்தைக் குறைக்கும்.

நார்ச்சத்து காணப்படுவதால் கொலஸ்ரோலின் அளவையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும். எனினும் பேரீச்சம்பழத்தில் கலோரி அதிகம் இருப்பதால் நீரிழிவில் இரத்தத்தில் சர்க்கரை சத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்கள் பயன்படுத்தலாம்.



பகலில் பேரீச்சம்பழம் சாப்பிடுவது சிறந்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 587





தூதன் ஒருவன் வந்து அவர்களிடம் ஏதோ செய்தி சொல்கிறான். இராஜ குடும்பத்தைச் சேர்ந்த யாரோ ஒருவர் கடலில் மூழ்கிவிட்டதாகச் சொல்லுகிறான்."

"ஐயோ! பாவம்! அந்தத் தூதனை ஜனங்கள் அடிக்கப் போகிறார்கள். இளவரசே! அம்மாதிரி ஏதாவது நேர்ந்தால் தாங்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் ஜனங்கள் மத்தியில் செல்ல வேண்டாம்! சென்றாலும் ஜாக்கிரதையாகச் செல்லுங்கள்!"

"கடலில் மூழ்கியது யார் என்று பெயர் சொல்லவில்லையா?"

"கூச்சலிலும் குழப்பத்திலும் பெயர் காதில் விழவில்லை. அந்தக் காட்சி மறைந்துவிட்டது."

"இப்போது, கழுத்தில் மண்டை ஓடு மாலைகளை அணிந்த ஒரு பயங்கரமான கூட்டம் என் கண்முன் தெரிகிறது. காபாலிகர்கள் காலாமுகர்கள் போல் தோன்றுகிறார்கள். அவர்களில் ஒருவன், கையில் ஒரு பயங்கரமான அரிவாளை வைத்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு எதிரில் பலிபீடம் ஒன்று இருக்கிறது. இளவரசே! இங்கேயும் இராஜகுமாரர் ஒருவர் வருகிறார். காலாமுகர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு கும்மாளம் அடிக்கிறார்கள். ஐயோ! தப்பித் தவறிக்கூடத் தாங்கள் அப்படிப்பட்ட கூட்டத்தின் மத்தியில் போகவேண்டாம்!"

இதைக் கேட்டதும் மதுராந்தகருடைய முகத்தில் வியர்வை துளித்தது அவர் உடம்பு நடுங்கியது. வந்தியத்தேவன் அதைக் கவனித்துக் கொண்டான். பின்னர், 'இளவரசே! மேலே ஒன்றும் எனக்குத் தெரியவில்லை, மன்னிக்க வேண்டும். என் தலை சுற்றுகிறது, கண் இருளுகிறது. யாரோ மந்திரம் போட்டுத் தடை செய்கிறார்கள். இன்னொரு சமயம் இன்னொரு இடத்தில் பார்த்துச் சொல்கிறேன்!" என்று கூறித் தன் தலையைக் கையால் பிடித்துக் கொண்டான்.

அச்சமயத்தில் அரண்மனைச் சேவகன் ஒருவன் வந்து, பெரிய மகாராணி செம்பியன் மாதேவி இளவரசரை அழைத்து வரச் சொன்னதாகக் கூறினான். மதுராந்தகர் தம் உள்ளத்தில் பொங்கிய ஆத்திரத்தையெல்லாம் அன்னையின்மீது கொட்டிவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டு புறப்பட்டார்.

"ஐயா! தலைவலி பொறுக்க முடியவில்லை. அரண்மனைக்கு வெளியே சென்று இந்த நகரைக் கொஞ்சம் சுற்றிப் பார்த்து விட்டு வருகிறேன்!" என்று வந்தியத்தேவன் அவரிடம் கூறி அனுமதி பெற்றுக் கொண்டான்.

பழையாறை மருத்துவர் மகன், பினாகபாணி பண்டிதனுக்கு வாழ்க்கையில் ஒரு புதிய ரஸம் ஏற்பட்டிருந்தது. சில நாளைக்கு முன்பு வரையில் அவன் தந்தையிடம் மருந்து சாஸ்திரம் கற்றுக் கொள்வதுடன் திருப்தியடைந்தான். கோடிக்கரைப் பிரயாணத்தின்போது, வந்தியத்தேவன் வெளி உலகத்தைப் பற்றிப் பல விடயங்களை அவனுக்குக் கூறினான். அத்துடன் மட்டும் அவன் நிறுத்தவில்லை. புதிதாகக் காதல் வலையில் விழுந்தவர்களுக்கு அதைப் பற்றி யாரிடமாவது பேசத் தோன்றுவது இயல்பு. வைத்தியர் மகன் முதல் தர அசடு என்று தெரிந்து கொண்ட வந்தியத்தேவன் அவனிடம் பெண்களிடம் காதல் கொள்வதைப் பற்றிய அபாயங்களைப் பற்றிப் பேசலானான். நான், ஒரு பெண்ணிடம் காதல் கொண்டு, அதன் பயனாக அனுபவித்துவரும் இன்ப துன்பங்களைப் பற்றியும் கூறினான்.

வைத்தியர் மகன் பினாகபாணி இந்தப் பேச்சுக்களை முதலில் அவ்வளவாக ரசிக்கவில்லை. சிறிது சிறிதாக அவன் மனம் மாறியது. வந்தியத்தேவனிடம் விவரமில்லாத அசூயையும், ஆத்திரமும் ஏற்பட்டன. அவனுடைய மனத்தைக் கவர்ந்த மங்கையின் ஊர், பெயர் என்ன என்று கேட்டான். வந்தியத்தேவன் சொல்ல மறுத்துவிட்டான். அதனால் பினாகபாணியின் கோபம் அதிகமாயிற்று. கோடிக்கரை போய்ச் சேருவதற்குள் வந்தியத்தேவனை வைத்தியரின் மகன் தன்னுடைய சத்துருவாகவே கருதத் தொடங்கிவிட்டான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மணியால் வந்த சோதனை



ஒருநாள் நல்ல மழை, ராஜன் தனது தோட்ட வேலைகளை முடித்துவிட்டு கிளம்ப வழிப்பாதையில் சத்தம் கேட்டு அருகில் சென்றான். குட்டியாக மழையில் நனைந்தவாறு நாய் இருக்க அதன் மேல் பரிதாபப்பட்டு ராஜன் தூக்கி கொண்டு வீட்டுக்கு வந்தான்.

மிகவும் குட்டியாக ஓரஞ்சு மற்றும் வெள்ளை நிறத்தில் புசு புசு என பார்ப்பதற்கு அழகாகவும் இருந்தது.

ராஜனுக்கு மட்டும் இல்லாமல் அந்த பகுதியில் இருந்தவர்கள் எல்லாம் அதை பாசமாக கொஞ்ச ஆரம்பித்தார்கள். அதற்கு பப்பு என பெயர் வைக்க, அதுவும் எல்லோரிடமும் ஜாலியாக விளையாட ஆரம்பித்தது.

நாட்கள் செல்ல பப்பு வளர ஆரம்பித்தது. முன்பு சாதுவாக இருந்த பப்புவின் குணாதிசயம் கொஞ்சம் கொஞ்சமாக மாற ஆரம்பித்தது. ராஜனை தவிர யாரை பார்த்தாலும் பின்னால் சென்று அவர்களுக்கு தெரியாமல் கடிக்க ஆரம்பித்தது.

அதிலிருந்து ராஜனின் வீட்டிற்கு வர யோசித்தார்கள். ஆனால் ராஜனுடன் வியாபாரம் செய்பவர்கள் பயந்து பயந்து வந்தார்கள். பலரும் ராஜனிடம் இதற்கு ஏதாவது தீர்வு இருந்தால் நல்லது என கேட்க, ஆட்டு குட்டி கழுத்தில் கிடந்த மணியை எடுத்து பப்புவின் கழுத்தில் கட்டினார் ராஜன்.

பப்புவும் ஏதோ பெரிய பதக்கம் கிடைத்தது போல மகிழ்ச்சியில் துள்ளி குதிக்க மணியின் சத்தம் தெளிவாகவே எல்லோர்க்கும் கேட்டது.

அதிலிருந்து ராஜனின் வீட்டிற்கு வருபவர்கள் உஷாராக ஆரம்பித்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதி உள்ளத்தில் நிலைபெறும் போது பாறை போன்று பலமானவராக பிறருக்கு நாம் தென்படுவோம்.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்த நாட்டின் ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க

2024 – ஜனாதிபதித் தேர்தல் ஒரு பெரும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அநுர குமார திஸாநாயக்க இந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெறும் 3.16 சதவீத வாக்குகளை மட்டும் பெற்றிருந்த அநுர குமார திஸாநாயக்கவை, 2024ஆம் ஆண்டில் இந்த நாட்டின் ஜனாதிபதியாக மக்கள் தெரிவு செய்துள்ளனர் எனில், தேசிய மக்கள் சக்தியின் அரசியல் வேலைப்பாடுகள் எப்படியாக இருந்துள்ளன என்பதை அனுமானிப்பதில் கடினம் இருக்க முடியாது.

ஆம், அரகலப் போராட்டம் குறித்து தமிழ் மக்களாகிய நாம் ஆழமாக ஆராய வேண்டும்.

அவ்வாறு ஆராய்ந்தால், அரகல போராட்டம் இந்த நாட்டை ஊழல் நிறைந்த ஆட்சியாளர்களிடம் இருந்து மீட்பதற்கானது.

அதில் சுயஅரசியல் என்ற பேச்சுக்கே இடமில்லை.

தவிர, அரகல போராட்டத்தில் அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியின் வகிபாகம் முதன்மையானது.

உண்மை. ராஜபக்ஷ குடும்பம் இந்த நாட்டை வாரிச்சுருட்டுவதை பார்த்திருக்க விரும்பாத சிங்கள மக்கள், அதற்கு எதிராகப் பெரும் போராட்டம் நடத்தினர்.

ஊழல் புரிந்த ஆட்சியாளர்களை நாட்டை விட்டுத் துரத்தினர்.

இந்த மண்ணில் அவர்கள் மீளவும் காலடி வைக்கக்கூடாது என்பதுதான் சிங்கள மக்களின் ஒரே நிலைப்பாடு.

ஆனால் மக்களின் மனநிலையை உணர்ந்து கொள்ளாத ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டதுடன் ராஜபக்ஷ தரப்பைக் காப்பாற்றுவதில் தீவிரம் காட்டினார்.

அதற்காக அரகல போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களைக் கைது செய்யும் படலத்தை ஆரம்பித்தார்.

ஊழல்வாதிகளைத் துரத்திய இளைஞர்களைக் கைது செய்து, ராஜபக்ஷக்களைக் காப்பாற்ற நினைத்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டு மக்கள் நன்றி செலுத்த மாட்டார்கள் என்பதை நிரூபிக்கவே ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்காமல் மக்கள் அவரை ஒதுக்கினர்.

தவிர, ஊழல் புரிந்து இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கபளீகரம் செய்த ராஜபக்ஷ தரப்பைச் சிறையில் அடைக்க வேண்டும். வீழ்ந்துபோன பொருளாதாரத்தை நிமிர்த்த வேண்டும் இந்த இரண்டு இலக்குகளையும் முன்வைத்தே அநுர குமார திஸாநாயக்கவை மக்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளனர்.

இனி புதிய ஜனாதிபதியின் நடவடிக்கையிலேயே அனைத்தும் தங்கியுள்ளது.

# இலங்கை என்னும் குழந்தையை அநுரவிடம் ஒப்படைக்கிறேன்

## ரணில் விசேட அறிக்கை

(கொழும்பு)

கடந்த 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையின்படி, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும் எனவும், அவருக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட ஊடக அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை எனும் அன்புக்குரிய குழந்தையினை சவால்மிகு தொங்குபாலத்தின் ஊடாக தான் இதுவரை பாதுகாப்பாகக் கொண்டு வந்துள்ளதாகவும், தற்போதைய ஜனாதிபதி அந்தக் குழந்தையை இன்னும் பாதுகாப்பாக தொங்குபாலத்தின் ஊடாகக் கொண்டுவர முடியும் என நம்புவதாகவும் ஜனாதிபதி தமது அறிவிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

செப்ரெம்பர் 21 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இந்த நாட்டின் பெரும்பாலான மக்கள் தீர்மானமொன்றை வழங்கியுள்ளனர். நாம் அந்தத் தீர்மானத்திற்கு மதிப்பளிக்க வேண்டும். அந்தத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை அரசின் நல்லிருப்பினை உறுதிப்படுத்த வேண்டும்.

இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வங்குரோத்து அடைந்து, பொருளாதார நெருக்கடி காரணமாக கடுமையாக வீழ்ச்சிடைந்திருந்த, மிகவும் கடினமான தொரு சூழ்நிலையில் நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்றேன்.

அந்த சவாலுக்கு முகங்கொடுக்கின்ற அளவிலான ஆத்ம சக்தி பெரும்பாலானோருக்கு இல்லாதிருந்த சந்தர்ப்பத்திலேயே நான் அந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டேன்.

வரலாறு எனக்கு வழங்கிய அந்தப் பொறுப்பினை நான் சிறப்பாக நிறைவேற்றினேன்.

இரண்டு வருட குறுகிய காலப்பகுதியினுள் என்னால் இந்த நாட்டினை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டெடுக்க முடிந்தது.

எனது அரசியல் வாழ்வில் எனது நாட்டுக்காக செய்யக் கிடைத்த பெறுமதியான கடமைப் பொறுப்பு அதுவாகும் என நான் நம்புகிறேன்.

இந்த நாட்டின் ஆட்சியாளர் என்ற வகையில் வரலாற்றில் எனக்கு உரித்தான இடம் இன்று அல்லாமல் எதிர்காலத்திலேயே தீர்மானிக்கப்படும் என்பதை நான் அறிவேன்.

நான் சரியான பாதையில் சென்று மக்களின் துயரங்களை முடிந்தளவு நீக்கினேன். புதிய ஜனாதிபதி அவர்களும் அவருக்குக் கிடைத்த மக்கள் ஆணையின் பிரகாரம் சரியான பாதையினைத் தெரிவு செய்து மக்களின் துயரங்களை நீக்குவார் என நான் எதிர்பார்க்கிறேன்.

மிகவும் சவால் மிகுந்த தொங்குபாலத்தில் இலங்கை எனும் பாசம் மிகுந்த குழந்தையினை நான் முடிந்தளவு அதிக பட்ச தூரம் பாதுகாப்பாகக் கொண்டு வந்தேன்.

அத்துடன், எனது ஆட்சிக் காலத்தினுள் அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய, வழங்காத அனைவருக்கும், இந்த நாட்டின் சகல பிரஜைகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் என்றுள்ளது. (ம-7)

# அநுரவின் வெற்றிடத்திற்கு லஷ்மன் நிபுண தெரிவு

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் புதிய பாராளுமன்ற உறுப்பினராக லக்ஷ்மன் நிபுண ஆராச்சி தெரிவு செய்யப்படவுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கட்சியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, தற்போது இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி காலியாகியுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டு இரண்டாவது இடத்தைப் பிடித்திருந்த லக்ஷ்மன் நிபுண ஆராச்சி அந்த வெற்றிடத்துக்கு நியமிக்கப்படவுள்ளார்.

அதனடிப்படையில் இந்த வாரத்துக்குள் அவர் தேசிய மக்கள் சக்தியின் புதிய பாராளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும் வாய்ப்புள்ளதாக தெரியவந்துள்ளது.

அதன் பின்னரே புதிய ஜனாதிபதியினால் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.(ம-7)

# விருப்பு வாக்கில் முறைகேடுகள்

## ரஞ்சித் மத்தும பண்டார

இரண்டாவது விருப்பு வாக்கு எண்ணிக்கையில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் மற்றும் அநுரவை பிரதான வேட்பாளராக கருதி இரண்டாவது விருப்பு வாக்கெண்ணும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார குற்றஞ்சாட்டியுள்ளார்.

சில வாக்கு எண்ணும் மையங்களில் தமது கட்சியின் முகவர்கள் இன்றி இரண்டாவது எண்ணிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி முகவர்கள் முன்னிலையில் இரண்டாவது எண்ணிக்கை நடக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொண்ட போதிலும் வாக்கு எண்ணும் மையங்களுக்குள் நுழைய எங்கள் முகவர்கள் அனுமதிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# கோட்டா வெற்றியீட்டிய 16 மாவட்டங்களில் 15 இல் வென்ற அநுர

(கொழும்பு)

2024 ஜனாதிபதித் தேர்தல் முடிவின் அடிப்படையில் 22 தேர்தல் மாவட்டங்களில் 15 மாவட்டங்களில் அநுர குமார திஸாநாயக்க வெற்றிபெற்றுள்ளார்.

அநுராதபுரம், பொலநறுவை, குருநாகல், புத்தளம், கம்பஹா, கேகாலை, கண்டி, மாத்தளை, கொழும்பு, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய 15 மாவட்டங்களில் திஸாநாயக்க முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

சஜித் பிரேமதாஸ ஏனைய 7 மாவட்டங்களான நுவரெலியா, பதுளை, திகாமடுல்ல, மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் வெற்றி பெற்றுள்ளார்.

2019 ஆம் ஆண்டு தேர்தலில் சஜித் வெற்றி பெறாத பதுளை மாவட்டத்தில் இம்முறை முன்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலை வகித்த 16 மாவட்டங்களில் ஒன்றைத் தவிர 15 மாவட்டங்களிலும் அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் உள்ளமை சிறப்பம்சமாகும். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்

## ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

18

பல கட்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு 1706 ஜூலை 22 இல் ஒரு முடிவு எட்டப்பட்டது.

(குறிப்பு-3 பெரிய பிரித்தானியா பின்னர் ஜனவரி 1, 1801 இல் அயர்லாந்துடன் அரசியல் ஒன்றிணைப்பை மேற்கொண்டு பெரிய பிரித்தானியா மற்றும் அயர்லாந்தின் ஐக்கிய இராச்சியத்தை (UK) உருவாக்கியது.)

1707 இல் ஏற்படுத்தப்பட்ட ஒன்றிணைவு ஒப்பந்தம் (The treaty of union) என்னும் இவ் உடன்படிக்கை ஸ்கொட்லாந்தின் பாராளுமன்றத்தாலும் அங்கீகரிக்கப்பட்டது. அவ்வேளை ஸ்கொட்லாந்தின் தலைநகர் எடின்பேர்க்கில் கலகம் வெடித்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்த கலகக்காரர்களுக்கு அஞ்சி, உடன்படிக்கையில் கைச்சாத்திட்டோர், இரகசியமாக அதனை நிகழ்த்தி ஸ்கொட்லாந்தை ஐக்கிய இராச்சியத்தின் பகுதியாக ஆக்கினர்.

ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான ஒன்றிணைப்புச் சட்டத்தை அங்கீகரித்ததைத் தொடர்ந்து 1707 இல் ஸ்கொட்லாந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. 1 மே 1707 இல் பெரிய பித்தானியா இராச்சியம் உருவாக்கப்பட்டதன் விளைவாக ஸ்கொட்லாந்து, இங்கிலாந்து என இரு பகுதிகளுக்கும் தனித்தனியாக இருந்து வந்த பாராளுமன்றங்கள் இல்லாது ஒழிக்கப்பட்டன.

வெஸ்ட்மினிஸ்டரில் அமைந்திருக்கும் பெரிய பிரித்தானியாவின் பாராளுமன்றம் தோற்றம் பெற்றது. 1707 இல் இம்மாற்றம் நிகழ்ந்தபோது ஸ்கொட்லாந்தின் நிறுவனங்கள் பல தொடர்ந்து செயற்பட்டு வந்தன. உடன்படிக்கையில் பல புறநடையான விடயங்களும் உள்ளடக்கப்பட்டன.

அ) ஸ்கொட்லாந்தின் சட்டமுறைமை
ஆ) கல்வி முறைமை
இ) ஸ்கொட்லாந்தின் பிரிஸ்பிரிட்டேரியன் கிறிஸ்தவ திருச்சபை (Presbyterian Church)
ஈ) உள்ளூராட்சி முறைமை

ஆகியன ஸ்கொட்லாந்துக்கே உரிய தனித்துவ இயல்புகளுடன் தொடர்ந்து செயற்பட்டன. இந்நிறுவனங்கள் ஐக்கிய இராச்சியத்தின் பிற பகுதிகளில் இருந்து வேறுபட்டனவாய் இருந்து வந்தமை, ஸ்கொட்லாந்தின் தேசிய அடையாளம் தனித்துவத்தோடும் வீரியத்தோடும் நிலைத்து நிற்பதற்குக் காரணமாயிற்று.

19 ஆம் நூற்றாண்டில் ஸ்கொட்லாந்தின் கைத்தொழில் மயமாக்கம் வேகமாக நடைபெற்றது. இதனால் அந்நூற்றாண்டில் ஸ்கொட்லாந்து தேசியவாதம் தணிவுற்றது. ஆனால் 1870 இல் பாராளுமன்றம், ஸ்கொட்லாந்தின் எஞ்சியிருந்த சுயாதீனத்தில் தலையீடுசெய்தது. இதனால் ஸ்கொட்லாந்தின் சுயாட்சி அச்சுறுத்தலுக்கு ஆளானது.

இதனைத் தொடர்ந்து தேசியவாதம் மீண்டும் தலை தூக்கியது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதி 15 ஆண்டு காலத்தில் ஸ்கொட்லாந்திற்கும் தாயக ஆட்சி வேண்டும் என 7 தடவைகள் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

ஸ்கொட்லாந்திற்குச் சுயாட்சி வேண்டும் எனக் கூறியோர் ஸ்கொட்டிஷ் தேசிய கட்சி (Scottish national party – SNP) என்னும் கட்சியை 1920 களில் ஆரம்பித்தனர். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் முடிவில் 1945 இல் முதல் தடவையாக ஸ்கொட்டிஸ் தேசிய கட்சி (எஸ். எம்.பி) பாராளுமன்றத்தில் ஓர் ஆசனத்தை பெற்றுக் கொண்டது.

ஆயினும் வெஸ்ட்மினிஸ்டர் நிர்வாகம் ஸ்கொட்லாந்து விடயத்தை தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. ஸ்கொட்லாந்தின் தேவைகள் குறித்து தொழிற்கட்சி அக்கறை கொண்டு செயற்பட்டது. தொழிற்கட்சி ஏற்படுத்திய பல திட்டங்கள் சுயாட்சி இயக்கத்தை வலுவிழக்க செய்தன.

பல கைத்தொழில்கள் தேசிய மயமாக்கப்பட்டன, புதிய தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன, வீடமைப்பு - சுகாதாரம் - சமூகச் சீர்திருத்தம் ஆகிய சமூக நலத் திட்டங்கள் பலப்படுத்தப்பட்டன. இவற்றின் பயனாக பிரித்தானியாவின் அரச கட்டமைப்புக்குள் ஸ்கொட்லாந்தின் நிலை உயர்ந்தது.

1960 களிலும் 70 களிலும் நாட்டின் பொருளாதார நிலைமைகள் மோசமடைந்தன. இக்கால கட்டத்தில் ஸ்கொட்டிஸ் தேசிய கட்சி தன்னை பலப்படுத்திக் கொண்டது. இந்நிலையில் கூட தொழிற்கட்சி அதிகாரப் பகிர்வு வழங்கலாம் எனக் கீழிறங்கி வரவில்லை. பழமைவாத கட்சியினர் அப்போது ஸ்கொட்லாந்திற்கு ஒரு சட்டசபையை (Assembly) கொடுக்கலாம் என முன்மொழிந்தனர்.

### 1979 இன் சர்வசன வாக்கெடுப்பும் தேசியவாதத்தின் பின்னடைவுகளும்

அதிகாரப் பகிர்வு தொடர்பாக 1979 மார்ச் 7 ஆம் திகதி சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஸ்கொட்லாந்து சட்டசபைக்கு குறைந்த அளவு அதிகாரங்களை வழங்கும் 1978 இன் ஸ்கொட்லாந்து சட்டம் (The Scotland Act of 1978) நடைமுறைப்படுத்தலாமா, இல்லையா? என்பதே சர்வசன வாக்கெடுப்புக்கு விடப்பட்ட விடயம்.

63.8% வாக்காளர்கள் மட்டுமே இவ் வாக்கெடுப்பில் பங்கு கொண்டனர். இவர்களில் 51.6% வாக்காளர்கள் 'ஆம்' என வாக்களித்தனர். இது பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் தொகையில் 40% என்ற எல்லைக்கும் குறைவான ஆதரவு வாக்குகளாக இருந்தது. பாராளுமன்றம் விதித்த நாற்பது வீத எல்லைக்கு குறைவான வாக்குகள் கிடைத்ததால் யோசனை நிராகரிக்கப்பட்டது. அடுத்து வந்த பொதுத்தேர்தலில் ஸ்கொட்டிஸ் தேசிய கட்சி தனது வாக்கு வங்கியில் மூன்றில் ஒரு பங்கை இழந்தது.

மார்கிரேட் தச்சரின் (MARGARET THATCHER) பழமைவாத கட்சியினர் ஸ்கொட்லாந்து தேசியவாதம் மீள் எழுச்சி பெற காரணமாக இருந்தனர். அவர்கள் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றினர். ஆனால் ஸ்கொட்லாந்தில் பழமைவாதக் கட்சிக்கு மொத்த வாக்குகளில் 17% மட்டுமே கிடைத்தது.

ஸ்கொட்லாந்தில் இருந்து ஒருவர் கூட அவரது அமைச்சரவையில் இருக்கவில்லை. பழமைவாத கட்சியினர் ஆட்சியில் சமூக நலத்திட்டங்கள் கைவிடப்பட்டன. இந் நடவடிக்கை ஸ்கொட்லாந்து அரசியல் பண்பாட்டின் மீதான தாக்குதல் என்றே கருதலாம்.

தொழிற்கட்சி ஸ்கொட்லாந்திற்கு சுயாட்சி [illegible] தவறு என இக்கட்டத்தில் உணர்ந்தது. ஸ்கொட்லாந்தின் பாராளுமன்றம் பழமைவாதிகளுக்கு (Tories) எதிரான காப்பரணாக விளங்க முடியும் என தொழிற்கட்சியினர் சிந்தித்தனர். பழமைவாத கட்சியை அதிகாரத்திலிருந்து நிரந்தரமாக ஒதுக்கி தள்ளி விடவும் இதுவே வழி எனவும் தொழிற்கட்சி சிந்தித்தது.

1994 தேர்தலில் ரோனி பிளேயரின் தொழிற்கட்சி ஆட்சியை பிடித்தது. ஆயினும் இங்கிலாந்துகாரர்களின் போக்கில் மாற்றமேற்படவில்லை. இத் தேர்தலின் போது தொழிற்கட்சி ஸ்கொட்லாந்து, வேல்ஸ் என்ற இரு பகுதிகளுக்கும் அதிகாரப் பகிர்வு மூலம் வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்றத்தின் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கப் போவதாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்திருந்தது.

1997 செப்டம்பர் 11 ஆம் திகதி சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 74.3% வாக்காளர்கள் ஸ்கொட்லாந்து பாராளுமன்றம் அமைவதை ஆதரித்தனர். இவர்களில் 60% வாக்காளர்கள் வரி அறவிடும் அதிகாரமும் ஸ்கொட்லாந்திற்கு வேண்டும் என்று தெரிவித்தனர். இந்த சர்வசன வாக்கெடுப்பு 60.4% ஆதரவாக அமைந்தது.

ஸ்கொட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களை (MSPs) தேர்ந்தெடுக்க நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஸ்கொட்லாந்து பாராளுமன்ற தேர்தல்கள் நடைபெறுகின்றன. 1998 ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்து சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்திற்கான முதல் தேர்தல் 1999 இல் நடைபெற்றது.

### ஸ்கொட்லாந்து சட்டம் 1998

1997 டிசெம்பர் 17 ஆம் திகதி ஸ்கொட்லாந்து சட்ட மசோதா முன்வைக்கப்பட்டது. அரசின் அங்கீகாரத்தை பெற்றதும் 1998 நவம்பர் 19 இல் இது சட்டம் ஆகியது. இச்சட்டம் வெஸ்ட்மினிஸ்டர் மாதிரியில் ஸ்கொட்லாந்திற்கு பாராளுமன்றம் ஒன்றையும், நிர்வாக அதிகாரத்தையும் (ஸ்கொட்லாந்து மந்திரிசபை) வழங்கியது.

ஒற்றையாட்சி நாடுகளில் அதிகாரம் பகிர்ந்தளிக்கும் போது அதிகாரத்தை பெறும் அலகுக்கு எவ்வெவ் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று பட்டியலிடப்படும். ஆனால் ஸ்கொட்லாந்து சட்டத்தில் இவ்வாறு ஸ்கொட்லாந்து சட்டசபையின் இயலுமைகள் எவையென பட்டியலிடப்படவில்லை. இது ஒரு தனித்துவமான அம்சமாகும்.

ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன்றத்திற்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் (Reserved Powers) அட்டவணை 5 இல் பட்டியலிடப்பட்டுள்ளது. அட்டவணை 4, திருத்தம் செய்ய முடியாதவற்றை பட்டியலிட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் தவிர்ந்த எஞ்சிய அதிகாரங்களை ஸ்கொட்லாந்து பாராளுமன்றம் பிரயோகிக்கலாம்.

ஸ்கொட்லாந்து பாராளுமன்றம் ஐரோப்பிய மனித உரிமை சாசனம் (Convention on Human Rights) ஐரோப்பிய சமூகச் சட்டம் (European Community Law) என்பவற்றோடு முரண்படும் சட்டங்களை இயற்ற முடியாது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுர...

- **உயர்கல்வி** - தம்புத்தேகம மத்திய கல்லூரி.

குறித்த பாடசாலையிலிருந்து உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான முதல் மாணவர் இவராவார்.

1992 இல் களனிப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான இவர் 1995இல் பட்டதாரியானார்.

**அரசியல் வாழ்க்கை!**

- 1997இல் சோஷலிச இளைஞர் அமைப்பின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.
- 1997இல் ஜே.வி.பியின் மத்திய செயற்குழு உறுப்பினராகவும், 1998 இல் ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார்.
- 1998 இல் மத்திய மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட்டார்.
- 2000இல் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்குத் தெரிவானார்.
- 2004இல் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு அதிக விருப்பு வாக்குகளுடன் பாராளுமன்றத்துக்குத் தெரிவானார். கூட்டணி அரசாங்கத்தில் விவசாய அமைச்சர் பதவியையும் வகித்தார்.
- 2008இல் ஜே.வி.பியின் பாராளுமன்றக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- 2010 இல் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்கு...
- 2014 ஜனவரி 2ஆம் திகதி ஜே.வி.பியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அவர் பதவியேற்ற பின்னர் மாகாண சபைத் தேர்தலில் ஜே.வி.பியின் வாக்கு வங்கி அதிகரித்தது.

- 2015 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். எதிர்க்கட்சிப் பிரதம கொறடாவாகவும் செயற்பட்டார்.
- 2019 ஓகஸ்ட் 18ஆம் திகதி தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராகப் பெயரிடப்பட்டார்.
- 1982ஆம் ஆண்டு நடந்த முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி சார்பில் அதன் நிறுவுநரான றோகண விஜேவீர போட்டியிட்டு, 273,428 வாக்குகளைப் பெற்றிருந்தார்.
- அதன் பின்னர்,1999 ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி சார்பில் நந்தன குணதிலக போட்டியிட்டு, 344,173 வாக்குகளைப் பெற்றிருந்தார். (தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகிக்கின்றார்.)
- 2010இல் பொது வேட்பாளராகக் களமிறங்கிய பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கியது.
- 2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவில்லை. எனினும், மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கக்கூடாது எனப் பிரசாரம் முன்னெடுத்தது. (ம-7)

## மக்களுக்கு...

தார்.

மேலும், தேர்தல் முடிந்து ஒரு வாரத்திற்கு கூட்டங்கள் நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. (ம-7)

## பாராளுமன்றம்...

பாராளுமன்றத் தேர்தலில் அதிகூடிய ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டும் அணி புதிய அரசாங்கத்தை அமைக்கும். (ம-7)

## ஜனாதிபதியாக...

2024 தேர்தல் முடிவுகளுக்கு அமைய முதலாம் கட்ட வாக்கு எண்ணிக்கையில் அநுர குமார திஸாநாயக்க 5,634,915 (42.31%) வாக்குகளையும், சஜித் பிரேமதாஸ 4,363,035 (32.76%) வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர்.

இதற்கமைய, அநுர குமார திஸாநாயக்க வாக்கு எண்ணிக்கையில் வெற்றி பெற்ற போதும் 50 சதவீத வாக்கினைப் பெறாத காரணத்தினால் இரண்டாம் கட்ட விருப்பு வாக்கு எண்ணிக்கை நேற்றுப் பிற்பகல் ஆரம்பிக்கப்பட்டது.

விருப்பு வாக்கு எண்ணிக்கைக்கு அமைய சஜித் பிரேமதாஸ 167,867 விருப்பு வாக்குகளையும், அநுர குமார திஸாநாயக்க 105,264 விருப்பு வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர்.

இதற்கமைய, மொத்த வாக்குகளாக அநுர குமார திஸாநாயக்க 5,740,179 வாக்குகளைப் பெற்று இந்நாட்டின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவரை எதிர்த்துப் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸ மொத்தமாக 4,530; 902 வாக்குகளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வெற்றி...

இவ்வளவு தூரம் கொண்டு வந்துள்ளது. அதற்காக நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இந்த வெற்றி நம் அனைவருக்கும் சொந்தமானது என தனது X தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும் அந்தப் பதிவில் இந்த நோக்கத்திற்காக தங்கள் வியர்வையையும், கண்ணீரையும், தங்கள் வாழ்க்கையையும் கூட அர்ப்பணித்த பலரின் தியாகத்தால் எங்கள் பயணம் செதுக்கப்பட்டுள்ளது. அவர்களின் தியாகங்கள் மறக்கப்படவில்லை. அவர்களின் நம்பிக்கைகள் மற்றும் போராட்டங்களின் செங்கோலை நாங்கள் தாங்குகிறோம். அது சுமக்கும் பொறுப்பை அறிந்தே, நம்பிக்கையினாலும் எதிர்பார்ப்பினாலும் நிரம்பிய கோடிக்கணக்கான கண்கள் எம்மை முன்னோக்கித் தள்ளுகின்றன. ஒன்றிணைந்து இலங்கை வரலாற்றை மீண்டும் எழுதத் தயாராக நிற்கிறோம்.

இந்தக்கனவை புதிய தொடக்கத்தில் மட்டுமே நனவாக்க முடியும். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் அனைத்து இலங்கையர்களின் ஒற்றுமையே இந்தப் புதிய தொடக்கத்தின் அடித்தளமாகும். நாம் தேடும் புதிய மறுமலர்ச்சி இந்த பகிரப்பட்ட வலிமை மற்றும் பார்வையிலிருந்து எழும்.

நாம் ஒன்றாக இணைந்து இந்த எதிர்காலத்தை வடிவமைப்போம்! என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ஜனாதிபதியாக அநுர...

செயலகத்தில் அவரது பதவியேற்பு வைபவம் மிக எளிமையான முறையில் இன்று நடைபெறவுள்ளது.

அதனையடுத்து தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய பிரதமர் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார்.

இன்னொரு பாராளுமன்ற உறுப்பினரான விஜித ஹேரத் நிதியமைச்சராக நியமிக்கப்படவுள்ளார். அதற்கு மேலதிகமாக புதிய ஜனாதிபதியின் கீழ் 15 அமைச்சுப் பொறுப்புகளும் கொண்டு வரப்படவுள்ளன.

சில அமைச்சுகளின் பொறுப்புகள் ஹரிணி மற்றும் விஜித ஹேரத் ஆகியோருக்கு இடையில் பகிர்ந்தளிக்கப் படவுள்ளன.

இதனையடுத்து இரண்டொரு நாட்களுக்குள் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, அமைச்சுகளின் நிர்வாகம் அமைச்சு செயலாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-7)

# தமிழர்களின் உணர்வுகளை மதிக்கும் தலைவராக செயலாற்றுக

## அநுரவுக்கான வாழ்த்தில் சிறீதரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்கும் தலைவராக செயலாற்றுமாறு புதிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் சிறீதரன் எம்.பி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்த வாழ்த்தில்,

இந்த நாட்டின் அரச இயந்திரத்தின் கொள்கை வகுப்பிலும், செயற்றிறனிலும் மாற்றத்தை எதிர்பார்த்து தங்களுக்கு ஆணை வழங்கிய தென்னிலங்கை மக்களைப் போலவே, கடந்த எழுபது ஆண்டுகால ஒடுக்குமுறைத் தளைகளிலிருந்து விடுபட்டு இறைமையுள்ள இனமாக வாழ்வதற்கான ஏதுநிலைகள் தங்களின் ஆட்சிக் காலத்திலேனும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஈழத் தமிழர்களிடையே நிறைந்திருக்கிறது. விசேடமாக, இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு இனத்தின் வலியுணர்ந்த சக பிரஜையாகவும், எமது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கக்கூடிய அரச தலைவராகவும் செயலாற்றும் வகையில் தங்கள் தலைமையிலான ஆட்சிப்பீடம் கட்டமைக்கப்படுமாயின், அதுவே இந்த நாட்டின் சுபீட்சத்துக்கான அடித்தளமாக அமையும். நாட்டின் அரசியல், பொருளாதார தளம்பல் நிலைகளை சமன் செய்வதிலுள்ள சவால்களை எதிர்கொண்டு செயலாற்றத் தயாராவதைப் போன்று, ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை உணர்ந்த மக்கள் தலைவராக, இனவாதமற்ற இலங்கைத் தீவை உருவாக்கும் அரசியல் கூருணர்வுமிக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம், ஈழத் தமிழர்களின் அடிப்படை உரித்துகளை உறுதிசெய்யும் வகையில் தங்களின் ஆட்சி மலரும் என்ற எதிர்பார்ப்போடு, தங்களின் வெற்றிக்கான வாழ்த்துகளை பகிர்ந்து கொள்கிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# ஒன்றரை இலட்சம் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இம்முறை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது ஒன்றரை இலட்சம் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேர்தல் வரலாற்றில் இம்முறை அதிகூடிய வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதன் காரணமாக எந்தவொரு வேட்பாளரும் 50 வீதம் வாக்குகளைப் பெற முடியவில்லை.

அதன் காரணமாக இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்பு வாக்குகளைப் பயன்படுத்துமாறு பொதுமக்களுக்கு பல்வேறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

எனினும் அவ்வாறு இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகளை அளிப்பதற்கான சரியான முறை குறித்த தெளிவு உரிய முறையில் வழங்கப்படாத காரணத்தினால் அவ்வாறு இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்கு கள் அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் பெருமளவில் நிராகரிக்கப்பட்டுள்ளன. (ம-7)

# தேர்தல்கள் ஆணைக்குழு மீது குற்றச்சாட்டு

தேர்தல்கள் ஆணைக்குழு மீது பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு 1981 ஆம் ஆண்டு 15ஆம் இலக்க தேர்தல் சட்டத்தின் 57ஆம் மற்றும் 58ஆம் பிரிவுகளை மீறியதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

50 வீத வாக்குகளை ஒரு வேட்பாளர் பெற்றுக்கொள்ளவில்லை என இரண்டாம், மூன்றாம், விருப்பு வாக்கு எண்ணும் நடவடிக்கையை தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்தாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த விருப்பு வாக்கு எண்ணும் நடவடிக்கை கட்சிப் பிரதிநிதிகள் இன்றி மேற்கொள்ளப்பட்டதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

வெற்றி, தோல்வி என்பதை விடவும் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட வேண்டியது அவசியமானது என எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார். (ம-7)

## ரணில்...

கியமான தீர்மானம் எடுத்து நாட்டை பெறுப்பெடுத்த ரணில் விக்கிரமசிங்க 2,299,767 வாக்குகளைப் பெற்று ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாம் இடத்தைப் பெற்றார். (ம-7)

## அரியநேத்திர...

16 ஆயிரத்து 688 வாக்குகளினால் அமோக வரவேற்பைப் பெற்றிருந்தார்.

அதேவேளை வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 36 ஆயிரத்து 377 வாக்குகளினைப் பெற்று வடக்கில் மொத்தம் ஒரு இலட்சத்து 53 ஆயிரத்து 65 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

இதேவேளை கிழக்கிலங்கையின் மட்டக்களப்புத் தேர்தல் தொகுதியில் 36 ஆயிரத்து 905 வாக்குகளையும் திருகோணமலைத் தேர்தல் மாவட்டத்தில் 18 ஆயிரத்து 524 வாக்குகளினையும் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 11 ஆயிரத்து 752 வாக்குகளினையும் பெற்று மொத்தமாக 67 ஆயிரத்து 181 வாக்குகளினைப் பெற்றிருந்தார்.

அந்த வகையில் தமிழர்களின் அபிலாசைகளுக்காக ஜனாதிபதித் தேர்தலில் களம் கண்ட தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் தமிழர் தாயகத்தில் ஒட்டு மொத்தமாக 2 இலட்சத்து 20 ஆயிரத்து 246 வாக்குகளினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க மக்கள் ஆணைகிடைத்துள்ளது

## வெற்றியின் பின் அநுர உரை

(கொழும்பு)

நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க மக்கள் ஆணை கிடைத்துள்ளது. நல்ல அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும் என்பதே எங்களின் எதிர்பார்ப்பாகும். என்னை ஆதரித்த மற்றும் ஏனைய வேட்பாளர்களுக்கு வாக்களித்த மக்கள் சகலரையும் தாய்நாட்டு மக்களாக மதித்து ஆட்சி புரிவேன் என்று அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவில் நேற்றிரவு உரையாற்றும் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலுக்காக முக்கிய பங்காற்றிய தேர்தல் ஆணைகுழுவுக்கு நன்றிகள்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்துள்ளோம். இந்த நெருக்கடிக்குத் தீர்வை வழங்க மக்களின் ஆணையுடன் ஆட்சியமைக்க வேண்டி இருந்தது. அந்த மக்கள் ஆணை தற்போது கிடைத்துள்ளது.

வன்முறை அற்ற தேர்தலை நடத்த கிடைத்தமையும் எமது வெற்றியாகும். தேர்தல் நடத்தும் முறையும், தேர்தல் வெற்றியை கொண்டாடும் கலாசாரமும் மாற்றமடைய வேண்டும். தேர்தலின் பின்னரான வன்முறைகளும் இடம்பெற கூடாது. எதிர்வரும் நாட்களில் அவ்வாறான வன்முறைகள் இடம்பெறக் கூடாது. அதற்காக எங்களின் ஒத்துழைப்பை நாங்கள் வழங்க வேண்டும்.

எம்மிடம் பாகுபாடு இருக்க கூடாது. மக்களின் எதிர்காலத்துக்காக சகல கட்சிகளுடன் இணக்கத்துடன் கலந்துரையாடி முன்னோக்கி செல்ல எதிர்பார்க்கிறோம்.எமது மக்கள் இந்தத் தேர்தலில் நேரடியாகப் பங்குபற்றி இருந்தார்கள். நல்ல அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும் என்பதே எங்களின் எதிர்பார்ப்பாகும். என்னை ஆதரித்த மற்றும் ஏனைய வேட்பாளர்களுக்கு வாக்களித்த மக்கள் சகலரையும் தாய்நாட்டு மக்களாக மதித்து ஆட்சி புரிவேன் என்றார். (ம-7)



இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ்ஜா புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவை சந்தித்து வாழ்த்துத் தெரிவித்த போது.

# அமெரிக்கத் தூதுவர் அநுரவுக்கு வாழ்த்து

(கொழும்பு)




ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வெற்றிக்காக அமெரிக்கா அநுரகுமார திஸநாயக்கவிற்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தங்கள் ஜனநாயக உரிமைகளை அமைதியான முறையில் பயன்படுத்தியமைக்காக இலங்கை மக்களைப் பாராட்டுகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

பகிரப்பட்ட முன்னுரிமைகளின் அடிப்படையில் இணைந்து செயற்பட தயார் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# அநுரவுக்கு வாழ்த்துத் தெரிவித்த நாமல்



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 9 ஆவது ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள அநுர குமார திஸாநாயக்கவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜ பக்ஷ தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது உத்தியோகபூர்வ சமூகவலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில் அவர் மேலும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 9ஆவது ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள அநுர குமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்துக்கள்.

மக்களின் ஆணையை மதித்து, நமது நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதில் உங்களுக்கு பலமும் வெற்றியும் கிடைக்க வாழ்த்துகிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, நாட்டின் 9ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்றுமுன்தினம் தினம் (21) நடந்து முடிந்துள்ளது.

இந்தத் தேர்தலில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ போட்டியிட்டு நாடளாவிய ரீதியில் 3,42781 வாக்குகளை பெற்று தோல்வியை தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

இந்தியன் விசா சேவைகள்
ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)
(3651)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1240)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும்
Immigration Services - விசா சேவைகள்.
CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-1240)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

புதிய பிரிவுகள் ஆரம்பம்
28.09.2024
தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AA1, AA 2, AA3)
G.C.E. O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level - I,II
வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF
Certificate Course in English
Further Details : Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/ 021 222 9149
- 077 440 5917
(C-1239)

## மரண அறிவித்தல்

### திருமதி சுப்பையாபிள்ளை சரோஜினிதேவி(ராசாத்தி)



தோற்றம் 10.05.1936 மறைவு 22.09.2024

இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் செட்டிவளவு ஒழுங்கை, இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பையாபிள்ளை சரோஜினிதேவி(ராசாத்தி) அவர்கள் நேற்று (22.09.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனின் திருவடி எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சு.விக்கினேஷ்வரராஜா(மகன்) :077 553 9964
ம.சிவகுமார் (மருமகன் - குமார்பந்தல்) : 077 352 7715
ம.ஜெயக்குமார் (மருமகன்) : 077 374 7342

(2104)

இப்பொழுது விற்பனையில்
முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில்
இலவச சிறுவர் சஞ்சிகை இணைக்கப்பட்டுள்ளது
யாழ் எக்ஸ்பிரஸ்
தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம், இஸ்லாம், இந்து சமயம், கத்தோலிக்க திருமறை ஆகிய பாடங்கள் உள்ளடங்கிய
3 ஆந் தவணை மாதிரி வினாத்தாள்கள்
தரம் 1 2 3 4
விலை 250/-
(C-1238)
Published By :
UNILANKA'S PUBLICATION
No. 326, Sea Street, Colombo - 11. Hotline : 0776258778 / 0777220324
What'sapp : 0776258778 / 0777220324
...புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.